KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஹு அக்டோபர் மீ 6உ [No. 39

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 761
2. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - கலிதொடர்காண்டம் 763
3. நம்மாழ்வார் வைபவம் (3-ம் பத்து, 9-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 765
4. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம். B.A. B.L. 767
5. பொதிகைநிகண்டு (பண்புபற்றிய பெயர்த் தொகுதி) S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 770
6. கைவை—வைகை N. R. சேஷாசாரி 772
7. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 773
4. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 1.) ஷேக்ஸ்பியர் நாடகம் 775
9. வர்த்தமானம் 779

கலாநிலயம்

கலைவளர்க்கும் முறை 1.

மக்களனைவரும் வேறென்றும் விழையாமல், நல்ல வராதல் வேண்டுமென்பதையே முதலும் முடிவுமாய குறிக்கோளாய் வைத்து அதனை, அரசிய லமைப்பு முறைகளாலும் சட்ட திட்டங்களாலும் விரைவினில் அடையவல்லோம் அல்லோமோ என்ற கேள்விக்கு விடையாக ஸ்ரீ அரவிந்தர் வாக்கியங்கள் சிலவற்றைச் சென்றவாரம் இங்கு எழுதினோம். அரசியல்வாதங்கள் ஒன்றற்கும் எவ்வாற்றானும் உதவமாட்டாமையை முன்னேர்முறை (1928-வது ஆண்டு) எழுதலையங்கங்களில், "அரசியலும் அரவிந்தரும்" என்னும் இத் தலைப்பின் கீழே விரிவாகக் காரணங்களுடன் வரைந்திருக்கின்றோமாதலின், அங்குக் காட்டியிருக்கின்ற காரணங்களை எல்லாம் மீண்டும் இங்குப் பேசவேண்டியதில்லை. அரசியல்வாதங்கள் அத்தனையும், எத்தேசத்திலும் எக்காலத்திலும் அற்ப நோக்கங்களை ஆதாரமாகக்கொண்ட அற்பர்களாலன்றி உயர்ந்தோர்களால் நிகழ்த்தலாகும் என்பது அதன் இயற்கையிலேயே இயலாத தொன்றும் என்னுமிவ்வாய்மை ஸ்ரீ அரவிந்தர் கண்ட முடிவு. இவரேபோல் ஸாம்யல் ஜான்ஸன் என்ற ஆங்கிலேயரும், வால்ட் விட்மன் என்ற அமெரிக்கரும், இவர்களனைய கருத்தாளர்களாகிய ஏனையோர் சிலரும் இம் முடிபிற்கே வந்திருக்கின்றனர். தர்க்கம் பிறழாமல் நம் முதிர்ந்த அனுபவமுங்கொண்டு நோக்குமிடத்து வேறோர்முடிவிற்குவருதலருமை. ஆன்மஉணர்வினுல் அரசியல் வாதங்களை நடத்தத் தலைப்படுவதெல்லாம் பாம்பிற்குப் பாலும் வேம்பிற்குத் தேனும் வார்த்து வளர்ப்பதை யொக்குமென்பதை நாடோறும் கண்டுவருகின்றோமே. ஆன்ம உணர்வினுல் ஒரு திருநாளைப்போவார் தோன்றலாம்; ஆன்மஉணர்வினுல் ஒரு திருக்குறிப்புத் தொண்டர் தோன்றலாம்; ஓரோவழி ஆன்மஉணர்வினுல் ஒரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோன்றலாம்; தோன்றி, "செம்மையே திருநாளைப்போவார்க்கு மடியேன், திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அன்பினுல் நெஞ்சம் நெக்குருகக் கரைந்துருகி அவ்வடியார்தம் தூயநினைவினைவழுத்தினராய் அவர்களுக்கு அடிமைபூணலாம். இது அவரவர் அடைந்திருக்கின்ற அகத்தூய்மையால் நேர்ந்த அழகு. இதற்கெதிர், ஆனமஉணர்ச்சி என்னும் ஆசையோடு செய்யப்படும் பற்பல அரசியல் வாதங்களால் விளைகின்ற ஆரவாரம் யாதும் பயனிலது. அரசியல் வாதத்திற்கு ஆன்மா இல்லை என்பதும் இருக்க இயலாதென்பதும் உரைத்தவளவில் ஒவ்வவேண்டியதோர் உண்மை. இல்லாத ஆன்மாவிற்கு உணர்வு ஊட்டுவது மலடிபிள்ளைக்குப் பேரிடுவதை நிகர்க்கும் என்னல் நேரிதன்றோ. "திருநீலகண்டம் எம்மைத் தீண்டேல்" என்ற அவ்வம்மையார், தம் கொண்கனைத் தீண்டாதார் இனதத ராக்கிவிட்டார் என்றோ பெரிய புராணத்தை மேற்கோள் உதவிக்கு அழைப்பது? திருநாளைப்போவாரைச் சுந்தரர் மனத்தாலும், அப்பரை அப்பூதிஅடிகள் மெய்யாலும் வணங்கியது அன்னோர்தம் ஆன்மானுபவங்களின் முதிர்ச்சியால் நேர்ந்த பெருமை. தீண்டப்படாத திருநீலகண்ட நாயனர் சரிதமும் அவ் வான்மஉணர்ச்சியையே ஆதாரமாகப் பற்றியிருக்கின்றது. எந்தவொரு அரசியல்வாதம் எந்த அரசியல்அமைப்பு எந்த ஒட்டெடுக்குந் தொகுதி மறறு எந்த ஒப்பந்தம், திருநாளைப் போவாரையும்

திருக்குறிப்புத் தொண்டரையும் சுந்தரரையும் அப்ப ரையும் அப்பூதி அடிகளையும் திருநீலகண்டரையும் உலகிற்கு அளிக்கவல்லதாகும். வேற்று வகுப்பினர் கிடக்க, உடன்பிறந்த இருவரை இணைக்கவல்ல சட்டம் ஒன்று எங்ஙனம் இயலும்? எனின் ஒருவனே, நாம் உரைத்த இலக்கணத்தின்படி, நல்லவனுக்க அரசியலில் எம்முறை உதவுமெனச் சிந்திக்கவும் வகையில்லையே. இயற்கையாயமைந்த சிறிது நற்குணத்தையும் சிதைப்பதற்கேயன்றி அரயசியல்வாதங்கள் புரியவல்ல உபகாரம் வேறென் றிருக்க வொண்ணுமோ.

இனி, எமக்கு நிருபம் எழுதிய அங்கண்பர், "அரசியல் வாதத்தால் நன்மை யொன்றும் கைகூடிவராது என்பது உறுதியே என்று வைத்துக்கொள்வோம். பின், அவரவர் தாமும் நல்லவராகி மற்றவரும் நல்லவராவதற்கு எந்த முறையைக் கையாளவேண்டுமென்பதை அன்புகூர்ந்து எனக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதற்கு, கலைகளே கருவி என்று நீங்கள் சொல்லியிருப்பதை நான் மறக்கவில்லை. சென்ற ஐந்து ஆண்டுகளாக நம் கலாநிலயத்தைச் சிரத்தையுடன் ஓதிவந்தும், அதனின்று பெற்ற சுவையினால் மற்ற நூல்களை ஓதத் தலைப்பட்டும், கலைநயம் ஒருவாறு உணரப்பெற்ற நான் இன்று உங்கள் கொள்கையையேனும் கருவியையேனும் மறக்க நினைக்கவும் இல்லை. இக் கலையுணர்வை எல்லாரும் எங்கும் எய்தவேண்டும் என்னும் ஆசையுடையவனாயிருக்கின்றேன். என்னைப்போன்ற ஆசையுடையவர் ஆங்காங்கு நம் கலாநிலய வாசகர்களில் சிற்சிலர் இருக்கின்றார்கள் என்பதும் என் நம்பிக்கை இத்தகைய ஆவல் உடையவர் என்ன செய்யவேண்டு மென்று சொல்லுவீர்களா? அதாவது, எந்த முறையைக் கைக்கொண்டால் நான் என்னால் கூடியஅளவு இந்தக் கலைமுறையைப் பரப்ப இயலும் என்பதைத் தெளிவாகவும் விரிவாகவும் விளக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இது, எனக்கும் என்னைப்போன்ற நிலைமையில் இருக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் உபகாரமாயிருக்கு மாகையால் இந்தச் சிரமத்தைப் பெரிய மனதுசெய்து தாங்கள் மன்னிக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்," என்றும் எம்மைக்கேட்டிருக்கின்றார். இவ்வேண்டுகோளிற் கிணங்கி நாம்இரண்டொரு சொற்கள் சொல்லவேண்டியது எம்முடைய கடமையாகின்றது.

எதற்கும் முறையென்று ஒன்றையும் நிறுவவேண்டியதில்லை; 'பிரசாரம்' என்ற எதையும் செய்யவேண்டியதில்லை. பொதுவாகப் பேசுமிடத்து, அன்பினால் இவ்வகை உயரிய ஆசை உதித்த நம் நண்பர்கள் தாமே மேன்மேலும் ஓதியோதித் தம்முள்ளங்களைத் தெளிவு செய்துகொள்ளவேண்டும். எனினும், எவ்வளவுதான் ஓதினாலும் எவ்வளவு சிந்தித்தாலும எவ்வளவு கேள்வியாலும் ஒருவர்கருத்து முற்றிலுந் தெளிவடைந்துவிடு மென்பதில்லை. அது அவர் பிழையுமன்று. இவ்விடயம்பற்றி மாரிஸ் மாடர்லிங்க் என்பவர் நுண்ணிதின் ஆராய்ந்து வரைந்திருக்கின்ற மொழிகளை முன் ஓர் இடத்தில் உரைத்திருக்கின்றோம். தெளிவடையும் கருத்தொன்று அதனினும் உயர்ந்தவோர் ஐயத்திற்கு இடமளிக்கும். ஆதலின் இன்னுஞ்சில ஐயங்கள் விளைகின்றனவே என்று சோராமல் தெளிந்தவரையில் ஊக்கங்கொண்டு உரியன செய்யத் தலைபடுவதே நம்மனோர் கடன் என்பதை நினைப்பூட்டுவதற்காக இதனை இங்குக் கூறினோம்.

இதனோடு இறைவன் அருளை இடைவிடாது நாடவேண்டும். இதனை நாம் வாசாகைங்கரியமாக எளிது கூறுகின்றோ மென்று எண்ணவேண்டா. இறைவன் அருளை நாடுகின்றவோர் நன்மதி கட்டளைப்படி பிறக்கக்கூடிய தொன்றன்றென்பதை யறிவோம். ஆயினும் உண்மையாகக் கலையுணர்வு உதிக்கின்றவர்தம் சிந்தை ஒருவரும் உரையாமலே இறைவனைநாடிக்கொள்ளநயவாமற் றீராது. கலையுணர்வினால் சுரக்குமொரு அளப்பரிய ஆர்வத்தின் பிழம்பே கடவுள். ஆயினும் கலைநெறிப் படர்வோர்க்கும் தாம் விரும்புமளவு கடவுள் நினைவு மனத்தின்கண் ஊன்றாமல் இடை இடையே சிதைவடையலாம். இறைவனை நாடவேண்டுமென்ற எண்ணம் வலிவின்றி நொய்தாய் இருக்கலாம். அதனை வலிவு செய்துகொள்வதற்குரிய முயற்சியில் சோம்பலாம். என்றாலும்ஒன்றும் நாணற்க; ஒவ்வொருபோது இறைவனை மறுக்கவே உங்கள்மனம் தூண்டினாலும் ஒன்றும் அஞ்சற்க. இறைவன் கருணை வேண்டுமே என்னுங் கவலை ஒரு கணமேனுந் தோன்றுகின்றவரையில் யாதுங் குறையில்லை. "கல்லேனுமைய ஒரு காலத் திலுருகும் என்கன்னெஞ்சம் உருகவில்லையே" என்று, இந்நிலை மக்களேய்ய தம் கருத்தில் வைத்துப் பெருந்தகைத் தாயுமானவர் முறையிட்டார் இறைவனருளை நாடவேண்டுமென்பதை முறையாக வைத்துக்கொள்வது இன்றியமையாதது. எத்தூரம இதபம் அதனிற்கு இணங்குகின்றதென்பது அவரவர் அடைந்திருக்கும் பக்குவத்தைப் பொருந்தியது. ஆதலின, பொய் வேடம் மிகுதி காட்டுவதுபோல், நம் நெஞ்சமே ஒவ்வோர்வேளைநம்மைஇடித்துரைக்கலாமாயினும்,"வாழி, நெஞ்சமே, பொய்வேடமோ இதுவென்று கவலுகின்ற அளவேனும் என்னுணர்வு உயர்ந்திருக்கின்றதுகாண்; இனி இன்றல்லாவிடினும், இப்பிறவியிலல்லாவிடினும், ஒருகாலத்தில் உய்கின்றேன் உய்கின்றேன்" என்றவொரு உறுதியும் உடனுக்குடனே உதிக்கின்ற உண்மையை, தம் உள்ளத்தை ஆராய்ந் தறிந்துகொள்ளும் பயிற்சி சிறிதேனும் உடையார் அறியாமலிரார். இவ்வுறுதியே இறைவனருளை நாடவேண்டும் என்னும் ஊக்கத்திற்குப் பெரும்பாலும் உணவாகும். கலைவளரும் நெஞ்சினர்கள் காண்கின்ற காட்சிக்கோர் வித்தும் ஆவது இது.

எனின், கலையுணர்வினைப் பிறர்பால் புகட்ட விழைவோர் முதலில் மறவாமற் காக்கவேண்டிய முறைகள் இவ்விரண்டுமாம்—தாம் ஓதுவதுஒழியாதிருத்தலும், இறைவன் அருளை நாடிக்கொள்ள நயத்தலும். விலக்கவேண்டியதொன்றும் இன்றியமையாததாயிருக்கின்றது. வர்த்தமானப் பத்திரிகைகளைக் கண்ணெடுத்தும் பார்த்தலாகாது. உலகம் மலைய இது உரைக்கின்றோம் என்று நம் வாசகர்களில் ஒருவரும் வாய்புதைத்து வியக்கமாட்டார் என்று நம்புகின்றோம். இதற்குரிய காரணங்கள் முன்னர் இவ்விதழ்களில் விளக்கப்பெற்றிருக்கின்றன. இதனை நாம் எளிதாகச் சொல்லிவிடவில்லை. முதிறிய சிந்தனையோடு உரைக்கின்றோம். ஆங்கிலப் புலவர் ஜான் ரஸ்கின் என்பவரும் அமரிக்க வித்தகர் ரால்ப் வால்டோ எமர்ஸன் என்பவரும் இவ்விடயத்தில் எம்சார்பு நிற்கின்றனர். அறிவிற்கும் அகத் தூய்மைக்கும் அன்பிற்கும் கல்வியின் அகலத்திற்கும்

இவ்விருவர்தம் பேர்களும் இன்று உலகெங்கும் அறிகுறிகளாய்நிற்கின்றன. கலையுணர்வையும் அவ்வுணர்வினால் விளையவல்ல உண்மை நலங்களையும் எய்தவொட்டாமல் இடையூறு செய்பவைகள் இவ் வர்த்தமானப் பத்திரிகைகள். பாவம், அவைகளின் நோக்கமோ அதுவன்று, உண்மையே. மற்று அவைசெய்யுங் காரியமோ அதுவேயன்றி வேறொன்று மன்று.

பொதுவாக, தாம் செய்துகொள்ளவேண்டியவைகளை இதனோடு நிறுத்தி, பிறர்க்குச் செய்துவைக்கக் கூடியவைகளை இனிச் சிறிது செப்புவோம்.

தமிழ்ப் பாடம் 39.

நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[745-வது பக்கத் தொடர்ச்சி]

அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலை யாற்றுவான் மேற்கடற்கே—எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற்
ஒளிப்பான்போற் பொற்றே ருடன். [பாரை 87.

இந்தச் செய்யுள் பகல்கழிந்து இரவுவருவதைச் சொல்கின்றது. சூரியன் மறைந்ததால் சூழ்ந்த இருளூடே நளனும் தமயந்தியும் சென்றனர் என்பது அடுத்த பாட்டில் வரும் செய்தி.

—

பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான லடம்பின் கவட்டிலைகள்—மானின்
குளம்பேய்க்கு நன்னாடன் கோதையொடுஞ் சென்றான்
இளம்பேய்க்குந் தோன்றா விருள். 88.

குறிப்பு:—இருளை வருணிக்கின்ற சொல்லாற்றல் புகழேந்திக்கு நன்கு அமைந்துள்ளது. முன்னோரிடத்தில், "கழுதும் வழிதேடுங் கங்குல்" (சுயம்வர காண்டம், 113-வது செய்யுள், 405-வது பக்கம்) என்றவர் இங்கு, "இளம்பேய்க்கும் தோன்றாத இருள்" என்றனர். இளம் பேய்க்கும் வழிதோன்றாத இருள், என்பது பொருள். பேய்க்கும் என்பதிலுள்ள உம்மை, உயர்வுசிறப் பும்மை. பேய்கள் எவ்வளவு அடர்ந்த இருளிலும் வழிதெரிந்து செல்லக்கூடும். அப்படிப்பட்ட பேய்க்கும் தோன்றாத இருள் என்பதால், அவ்விருளின் மிகுதி சிறக்கின்றது. இதனுடன் நில்லாமல், இளம் பேய்க்கும் தோன்றாத இருள் என்பதால், அவ்விருள் பின்னும் அதிகமாக அடர்ந்திருந்த தென்பது தெரியலாகும். முதிய பேய்கள் இவ்விருளிற்கு அஞ்சி வெளி வருவதற்கே நினையா. இளங்கன்று பயமறியாதாதலால் பேய்க்கன்றுகள் தாம் மிகத்துணிந்து இவ்விருளில் வழிதேடிச் செல்லலாமென வெளிவரும். அவ்விதம் துணிந்துவந்த இளம்பேய்களும் வழியறியாமல் திகைக்குமெனில் இருளின் அடர்த்தி எத்தகையதா யிருத்தல் வேண்டுமென்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.

—

எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிப்போய்
வெங்கா னகந்திரியும் வேலைதனில்—அங்கேயோர்
பாழ்மண்ட பங்கண்டான் பால்வெண் குடைநிழற்
வாழ்மண் டபங்கண்டான் வந்து. [கீழ் 89.

இத்தகை இருளில் தங்குமிடந்தேடி யலைந்த நளன் ஓர் பாழ்மண்டபத்தைக் கண்டான்.

—

மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தல்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து. 90.

கண்டு, 'இவ்விரவு இங்குத் துயில்வோம்' என்று தமயந்தியை அம்மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான்.

—

வைய முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொசுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா வென்றழுதாள் கெண்டையங்க ணீர்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து 91. [சோரத்

பதப்பரிவு:—வையம் உடையான் மகர யாழ் கேட்டு அருளும் தெய்வ செவி கொசுகின் சில் பாடல் இவ் இரவில் கேட்ட ஆ என்று அழுதாள் கெண்டை அம் கண் நீர் சோர தோட்ட வார் கோதையாள் சோர்ந்து.

அன்வயம்:—"மகரயாழ் கேட்டருளும் வையம் உடையான் தெய்வச் செவி, இவ்விரவில், கொசுகின் சில்பாடல் கேட்டவா" என்று, தோட்ட வார் கோதையாள், கெண்டை அம் கண்ணீர் சோரச் சோர்ந்து அழுதாள்.

பதவுரை.

"மகரயாழ் - மகரவீணையின் இசையை
கேட்டு அருளும் - கேட்டு அருள்கின்ற
வையமுடையான் - பூமிக்கு அரசனாகிய இவனது
தெய்வ - மேன்மை தங்கிய
செவி - காதுகள்
இவ் இரவில் - இந்த இராத்திரியில்
கொசுகின் - கொசுக்களினுடைய
சில் பாடல் - பாட்டொலியை
கேட்டவா - கேட்கவும் நேர்ந்ததே"
என்று - என்று,
தோட்டம் - மலர்களை யணிந்த
வார் - நீண்ட
கோதையாள் - கூந்தலையுடைய தமயந்தி,
கெண்டை - கெண்டைமீனை ஒத்த
அம் - அழகிய
கண் - கண்களிலிருந்து
நீர் - நீர்
சோர - வடிய
சோர்ந்து - சோர்வடைந்து
அழுதாள் - அழுதாள்.

விரிவுரை:—தனக்கும் தன் நாயகனுக்கும் ஒருங்கே வறுமைவந் துற்றதானாலும் உத்தம பத்தினியாய தமயந்தி, தன்னிலை மறந்து அவன்கதி கண்டு இரங்குகின்றமேன்மையை இங்குக் காண்கிறோம். கொசுக்கள் அடர்ந்து மொய்க்கின்ற அப் பாழடைந்த மண்டபத்தில் ஆவிபோல் ஆடையும் ஒன்றாய் இவ்விருவரும் எய்தினர். எய்தியவுடன், நளனுக்கு முன்னிருந்த

செல்வமும் இப்பொழுது அவன் அடைந்த நிலையும் நினைத்த தமயந்தி அவன் கதியைக் குறித்து அழுகின்றாளே யன்றி, "ஈசா, என் கதி இப்படியாயிற்றே," என்ற வருத்தம் தன்பொருட்டு அவளுக்குத் தோன்றவில்லை.

———

பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்ட னிழலிற் குழைதடவும்—கெண்டை
வழியனீ ரென்றான் மனநடுங்கி வெய்துற்
றழியனீ யென்றா னரசு. 92.

பதப்பிரிவு:—பண்டை வினை பயனை பார் இடத்தில் ஆர் கடப்பார் கொண்டல் நிழலில் குழை தடவும் கெண்டை வழியல் நீர் என்றான் மனம் நடுங்கி வெய்து உற்று அழியல் நீ என்றான் அரசு.

பதவுரை.

அரசு - நளவேந்தன் (தமயந்தியை நோக்கி)
"பண்டை வினை - முன்செய்த வினைகளால் விளையும்
பயனை - பயன்களை
பார் இடத்தில் - இந்தப் பூமியில்
கடப்பார் - (அநுபவிக்காது) விலக்கக் கூடியவர்
ஆர் - யாரிருக்கின்றனர், (ஆதலால்)
கொண்டல் - மேகம்போன்ற உன் கூந்தலின்
நிழலில் - நிழலிலே
குழை - குண்டலங்களை
தடவும் - தொடுகின்ற [விருந்து
கெண்டை - கெண்டைமீன் போன்ற கண்களி
நீர் - நீரை
வழியல் - பெருக்காதே"
என்றான் - என்றான் (அவளோ, பின்னும்
"மனம் - மனம் அழுவது கண்டு)
நடுங்கி - நடுங்கி
வெய்துற்று - புழுங்கி
அழியல் - கரையாதே"
என்றான் - என்று தேற்றினான்.

விரிவுரை:—வருந்துகின்ற தமயந்திக்கு "விதியை நினைத்துக்கொள்" என்றுகூறி நளன் ஆறுதல் அளிக்கின்றான். அவளுக்கும் கருத்ததுவே என்பதை முன் 85-வது செய்யுளில் பார்த்தோம். கண்ணிரண்டும் ஒன்றையே நோக்குவதுபோல், துன்பத்திலுள்ளும் இவ்விதம் மாறுபடாச் சிந்தையராகின்ற இன்பம் இவர்களுக் குளது.

"கொண்டல் நிழலில் குழை தடவும் கெண்டை" யென்பதிலுள்ள கொண்டல் கெண்டை என்னுஞ் சொற்கள் உவமை யாகுபெயர்களாய்த் தமயந்தியின் கூந்தலையும் கண்களையும் குறித்து நிற்கின்றன. குழை என்றால் தளிர் என்னும் ஒரு பொருளும் உளது. மேகத்தின் நிழலில் தளிர்களை வந்து தீண்டும் கெண்டைமீன், கூந்தலுக்கடியில் பார்வையால் காதிலணிந்த குண்டலங்களைத் தீண்டும் கண்ணிற்கு உவமையாயிற்று.

"மனம் நடுங்கி வெய்துற்று அழியல்" என்றது அடங்கா தழுத தமயந்தியைப் பின்னுந்தேற்றியதாம்.

குறிப்பு:—அழியல், வழியல், என்பன வினை முற்றுக்கள். வா போ பேசு பார், என்பன போன்ற வினைகள், முன்னிருப்பவரை நோக்கி ஒரு காரியத்தைச் செய்யும்படி ஏவுவதால், இப்படி வருகின்ற வினைச் சொற்களுக்கு ஏவல் வினை என்று பெயர். ஆங்கிலத்தில் Verbs in the imperative mood இதற்கு நிகராகும். ஒன்றைச் செய் என்று சொல்கின்ற வினைகளும் ஏவல் வினைகள்தாம்; ஒன்றைச் செய்யாதே என்று சொல்கின்ற வினைகளும் ஏவல் வினைகள்தாம். செய்யாதே என்று மறுக்கின்ற ஏவல் வினைகளுக்கு எதிர்மறை ஏவல்வினை என்பது பெயர். செய் என்று சொல்கின்றவை உடன்பாட்டு ஏவல்வினை. உடன்பாட்டு ஏவல்வினையோடு அல் என்னும் விகுதி சேர்ந்தால் அது எதிர்மறை ஏவலாகிவிடும். வழி, அழி என்பனவற்றோடு அல் விகுதி சேர்ந்து வழியல் அழியல் என்று வந்திருப்பதால் இவை எதிர்மறை ஏவல்வினை முற்றுக்கள்.

———

விரைமலர்ப்பூ மெல்லணையு மெய்க்காவல் பூண்ட
பரிசனமும் பள்ளி யறையும்—அரசேநான்
காணேனிங் கென்னக் கலங்கினாள் கண்பனிப்பப்
பூணேர் முலையாள் புலர்ந்து. 93.

பதவுரை.

ஏர் - அழகை
பூண் - பூண்ட
முலையாள் - முலைகளையுடைய தமயந்தி,
புலர்ந்து - வாடி,
"அரசே - அரசனே,
விரை - வாசனைபொருந்திய
மலர் - மலர்களால் ஆகிய
பூ - அழகிய
மெல் - மிருதுவான
அணையும் - படுக்கையையும்,
மெய் - சரீரத்தை
காவல் - காப்பதை
பூண்ட - மேற்கொண்ட
பரிசனமும் - பரிசனங்களையும் [உனக்கு
பள்ளி அறையும் - படுக்கையறையுமைம்
இங்கு - இவ்விடத்தில்
நான் - நான்
காணேன் - காணவில்லையே"
என்ன - என்று
கண் - கண்கள்
பனிப்ப - நீர்துளிக்க
கலங்கினாள் - கலங்கினாள்.

———

தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம்—நீயுமினிக்
கண்மேற் றுயில்கை கடனென்றான் கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து. 94.

பதப்பிரிவு:—தீய வனமும் துயின்று திசை துயின்று பேயும் துயின்றது (ஆல்) பேர்யாமம் நீயும் இனி கண்மேல் துயில்கை கடன் என்றான் கைகொடுத்து மண்மேல் திரு மேனி வைத்து.

அன்வயம்:—"பேர்யாமம், தீயவனமும் துயின்று, திசையும் துயின்று, பேயும் துயின்றது. நீயும் இனி மேல் கண்துயில்கை கடன்" என்று, (நளன்) மண்மேல் திருமேனி வைத்துக் கைகொடுத்தான்.

பதவுரை.

"பேர்யாமம் - இந்த நடுநிசியில்
தீய - கொடிய
வனமும் - வனத்திலுள்ள ஜந்துக்களும்

துயின்று - தூங்க,
திசை - எட்டுத்திக்கிலுமுள்ள உயிர்கள்
துயின்று - தூங்க,
பேயும் - பேயும்கூட
துயின்றது - தூங்கிவிட்டது;
நீயும் - நீயும்
இனிமேல் - இனிமேல்
கண்துயில்கை - கண் தூங்குவது
கடன் - முறை''
என்று - என்று கூறி
மண்மேல் - தரையின்மேல்
திரு - தன் அழகிய
மேனி - சரீரத்தை
வைத்து - கிடத்தி
கை - தன் கையை (தமயந்திக்கு)
கொடுத்தான் - தலையணையாகக் கொடுத்தான்.

விரிவுரை:—பாட்டுக்களில் சொற்களேயும்விகுதிகளே யும் ஒன்றைவிட்டுப் பிரித்து வேறொன்றோடு கூட்டிப் பொருள்கொள்ளவேண்டி நேரிடும். அப்படிப்பிரித்துக் கூட்டிப் பொருள்கொண்டதற்கு இந்தச் செய்யுளில் இரண்டு உதாரணங்கள் இருக்கின்றன. ''நீயும் இனிக் கண்மேல் துயில்கை கடன்'' என்று வருவதில் 'கண் மேல்' என்பதிலுள்ள 'மேல்' என்னும் சொல்லைப் பிரித்து எடுத்து 'இனி' என்பதோடு கூட்டி ''நீயும் இனி மேல் கண்துயில்கை கடன்'' என்று பொருள் கொண்டோம். அவ்வாறே 'என்றான் கைகொடுத்து' எனவருவதில்'என்றான்'என்பதுவினைமுற்றாகவும்,'கொடுத்து' என்பது வினையெச்சமாகவும் செய்யுளில் இருந்தபோதிலும், நாம் இவைகளே ''என்று கொடுத்தான்'' என மாற்றி, முன் முற்றாயிருந்ததை எச்சமாகவும் முன் எச்சமாக இருந்ததை முற்றாகவுங் கொண்டோம்.

குறிப்பு:—(1) வனம், திசை, என்பன அவ்விடங்களிலுள்ள பிராணிகளைக் குறிக்கின்றபடியால் இவை இரண்டும் இடவாகுபெயர்கள்.

(2) துயின்றதால், என்பதிலுள்ள ஆல், அசை. அதற்குப் பொருள் இல்லை. துயின்றது, என்பதுதான் பொருளுக்கு வேண்டிய சொல்.

(3) 'நீயும்,' என்பதிலுள்ள உம் இறந்தது தழுவிய எச்ச உம்மை.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[747-வது பக்கத் தொடர்ச்சி]

3-ம் பத்து, 9-ம் தசகம்.
1-ம் பாசுரம்.

சொன்னால் விரோதமிது வாகிலும்
சொல்லுவன் கேண்மினே
னென்னா விலின்கவி யானொரு
வருக்கும் கொடுக்கிலேன்
றென்னா தென்னா வென்று
வண்டுமுரற் றிருவேங்கடத்
தென்னானையென் னப்பன்
எம்பெருமா னுளனாகவே.

குறிப்புக்கள்:—என்னானை - என் யானை, அதாவது கம்பீரமுள்ள பிரபு. எம்பெருமான்-எனக்கும் பெருமாளுக்கும் உள்ளசம்பந்தம் அஸாதாரணமானது,ஒரு போதும் நிவிர்த்திக்கத் தக்கதன்று, எனக்கே உள்ள உபகாரகன், என்று தாத்பரியம். இன்கவி யாருக்கும் கொடுக்கிலேன்-பகவான்விஷயத்தில் அல்லாமல் என் கவிதையை விநியோகம் செய்யமாட்டேன், அவன் ஒருவனேயே பாடுவேன் அல்லாது மனிதரைத் துதி செய்து நான் பாடமாட்டுவேன் அல்லேன். உளனாகவே - எனக்குக் கவிபாட விஷயமா யிருக்கையிலே.

விசேஷக் குறிப்பு:—இந்தத் தசகத்துக்கு ஆறாயிரப்படி உரைகாரர் அருளிச்செய்திருக்கிற அவதாரிகையும் அர்த்தமும் இன்றியமையாததுபற்றி அவைகளே எடுத்து வரைவோம். ''இப்படித் தம்முடைய ஸர்வ கரணங்களும் தனித்தனியே தன்னைத் தவிர்த்த இதர கரணங்களினுடைய விருத்திகளே யெம்பெருமான் திறத்தில் ஆசைப்பட்டபடி பெருமையாலே அத்தியந்தம் துயருற்ற ஆழ்வார் இச் சமயத்தில் தமக்குத் துணையாகைக்காக இந்த லோகத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களுளரோ என்று பார்த்தவிடத்தில் இந்த உகலத்தாரெல்லாரும் பகவத்விஷயம் தவிர மற்ற விஷயங்களில் பற்றுதலுண்டாகிப் பகவத் விஷயத்தை விட்டு மனுஷ்யாதிகளைக் கவிபாடிக்கொண்டு திரிகிறபடியைக் கண்டார். கண்டதும் தம்முடைய இழவெல்லாம் மறந்து எம்பெருமானுக்கே அர்ஹமான அருமந்த இந்தக் கரணங்களை,தத்துவத்தில் பயனற்ற மனுஷியர் பக்கலிலே உபயோகிப்பது ''என் காண்'' என்று இன்னாதாராய் அவர்களைக்குறித்து, கல்லியாணமாய்ப் பகவானுக்கே ஏற்கும் கவிகளை அல்பமானிடரின் பக்கல் அவர்கள் விநியோகிக்க லாகாதென்று பார்த்து, பண்டிதர்கள் மனம்நோவக் கூறலும் போகாது ஆகிலும் எம்பெருமானுக் கீடான அழகிய கவிகளை இழக்கமாட்டாமலே சொல்லுகிறேன் கேளுங்கோள், என்று வைத்து இப்படிப் பகவத் விஷயத்தில் பின்னடைந்து நிற்கும் லோகத்திலே நான் ஒருவன் எம்பெருமானை யல்லது மற்றொருவரைக் கவிபாடுகைக்கு ஈடல்லாத பிருகிருதியாகப் பெற்றேன் என்று கொண்டு சுயலாபத்தைப் பேசுகிறார்''—ஆறாயிரப்படி.

விசேஷக் குறிப்பு:-இத்தசகத்தில் நமக்குப் புலப்படுவது ஒன்று உண்டு. அது யாதெனில் - ஆழ்வார் காலத்தில் தம்மைப்போல் கவிபாட வல்ல பல புலவர்களும் ரஸிகர்களும் இருந்தார்கள்போலும். அநேகர் இருந்து ஆழ்வாரை நன்கு மதித்திருக்கவேண்டுமென்றும் ஊஹிக்க இடமுண்டு. பெரியார்கள் பிறந்து பெயர்விளங்கும் காலத்தில் திரள்திரளாக அவர் போன்றவர்கள்,இன்று அவர்பேர் மறைந்துபோயிருப்பினும், பலர் தோன்றிச் சிறப்புற்று அக்காலத்தால் ஆதரிக்கப் பெற்று இருந்திருப்பார்கள். இதற்கு உதாரணமாக, கம்பர் காலத்துப் புலவர்கள் கூட்டமும், புகழேந்திப் புலவர்காலத்து புலவர்கள் கூட்டமும், அமையும். ஆங்கிலத்தில் Elizabethiean Epoch பிரசித்தம்.

2-ம் பாசுரம்.

உளனாகவே யெண்ணித் தன்னை
யொன்றாகத் தன்செல்வத்தை
வளனா மதிக்கும் மானிடத்
தைக்கவி பாடியென்
குளனார் கழனிசூழ் கண்ணம்
குறுங்குடி மெய்ம்மையை
யுளனாய வெந்தையை வெந்தை
பெம்மானை ஒழியவே.

அன்வயம்—பதார்த்தம்:—தன்னை யொன்றாக எண்ணி, கண்ணம் - கண்-ஸ்தலம், அம்-அழகிய, அம்கண் என்று மாற்றி அன்வயம் கொள்ளவேண்டும். மெய்ம்மையை எவ்வளவு உயர்தர குணமுடையவனாகக் கவி பாடினாலும் அவ்வளவும் ஸத்தியமாய் எம்பெருமானுக்கு ஏற்கும், மெய்யை-நேரே பிரத்தியக்ஷிக்கலாம்படியாயும், வேதங்கள் சாஸ்திரங்கள் மற்றுமுள்ள இதர பிரமாணங்களால் நிரூபிக்கக் கூடிய மெய்யாய் உள்ளவனை; பெம்மான்-பிதா, அதாவது அனைவருக்கும் தந்தைபோல் பெரியோன். உளனாக-ஒருவஸ்துவாக மனதால்நினைத்துப் பொருட்பாடாகுந் தகுதியுடன் மதிக்கத் தக்கவனாக. உலகங்கள் முழுவதும் எம்பெருமானுக்கு விபுவாய் வியாபித்து நிற்கும் ஸகல ஐசுவரியங்களும் கருதி அவனுடைய மஹிமையை உரைக்கவேண்டாத தற்காலம் கோவில்கொண்டிருக்கும் அழகான வயல்களும் கழனிகளும் சூழ்ந்த திருக்குறுங்குடியின் சம்பத்தைக் கொண்டு உணர்ந்து பாருங்கோள், என்கிறவகையில் குறுங்குடியை வர்ணித்தபடி.

உரை:-சாச்வதமான நிரவதிக சம்பத்தை உடையவனாய், குற்றமற்ற ஸர்வ கல்யாண குணங்களையும் உடைய எம்பெருமானை ஒழிய, தன்னை ஒரு நற்குணமுள்ள வஸ்துவாகவும் தன் செல்வத்தை சம்பத்தாகவும் நினைத்திருக்கும் மனிதரைக் கவிபாடி என்னகுணமுண்டு. என் கவிக்குப் பகவான் ஒருவனே விஷயமாக உளன்.

குறிப்பு:—கவிகாள் ! நீங்களும் என் மாதிரியாகத் துணிந்து, மனிதரைப் பாடுவதை ஒழித்து எம்பெருமான் ஒருவனையே துதிசெய்யுங்கோள், என்று கூவியழைக்கின்றார்.

3-ம் பாசுரம்.

ஒழிவொன்றில்லாதபல்லூழிதோறூழி நிலாவப்போம்
வழியைத் தருநங்கள் வானவ ரீசனை நிற்கப்போய்க்
கழிய மிகநல்ல வான்கவிகொண்டு புலவீர்கா
ளிழியக் கருதியோர் மானிடம் பாட லென்னாவதே.

உரை:— புலவீர்காள் - பண்டிதர்களே! நங்கள் வானவர் ஈசன்-உமக்கும் நமக்கும் ஸ்வாமியாகவும் வானவரான நித்தியஸூரிகளுக்கு ஈசனாகவும் இருக்கிறவனை, நிற்க-ஒரு புறத்தில் நிற்கவிட்டு, அதாவது நீத்து, போய்-உங்கள் துதிக்கு யாரார் இருக்கிறார்களென்று தேடிப்போய், கழிய - மற்றெல்லா கவிதைகளும் ஒப்பில்லாமல் கழிந்துபோகும்படியான, மிகநல்ல - வெகு ரஸமான, வான் - ஒப்பற்ற, கவிகொண்டு - கவிதைகளால், இழியக்கருதி - வெகு அல்பமான பிரயோஜநத்தை அடைய எண்ணி, ஓர் மானிடம் பாடல் - ஒரு மனுஷ்யஜாதி வியக்தியைப் பாடினால், என்னாவது - என்ன நன்மையும் பயனும்உண்டு, யாதொன்றுமில்லை என்று தாத்பரியம். நங்கள் வானவர் ஈசனைப் பாடினாலோவெனில், அவன்—ஒழிவு ஒன்று இல்லாத - ஒரு விதத்தாலும் ஒரு காலத்திலும் ஏற்றந்தாழ்வு இடைவீடு இல்லாத சுகரூபமான, பல்லூழிதோறும் நிலாவப்போம் - வெகு கல்பங்கள்தோறும் நிறைவேறி நடக்காநிற்கும் வழியைத்தரும் வைகுண்டத்தில் நித்தியவஸித்தமான பகவத் கைங்கரியமாகின்ற மிகவும் சிரேஷ்டமான ஸன்மார்க்கத்துக்கு இறுதியானவோர் பதவியைத் தந்தருளும்.

குறிப்பு:—இப்பாசுரத்தில், கவிகளால் வரும் பிரயோஜநத்தின் தாரதமியத்தை நிரூபித்து மோக்ஷ சாதனமான பகவத் ஸ்துதியைச் செய்யுங்கோள்; மனிதரைக் கவிபாடுவதினால் உண்டாகும் ஒரு அல்ப பிரயோஜநத்தை நாடாதேயுங்கோள், என்று புலவர்களுக்குப் புத்திமதி கூறுகிறார்.

4-ம் பாசுரம்.

என்னாவ தெத்தனை நாளைக்குப்
போதும் புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும்பொருள்
மின்னார் முடிவிண் ணவர்தா
தையைப் பாடினாற்
றன்னாகவே கொண்டு சன்மம்
செய்யாமையுங் கொள்ளுமே

அவதாரிகை:—சில புலவர்கள் பிரபுக்களைப்பாடிப் பொருள் அடையவில்லையோ எனனில், அதற்குப் பதில் உரைக்கிறார்.

உரை:— புவவீர்காள் - நல்ல ஞானம் உடையவர்களே ; மன்னா-செல்வத்திலும் பௌஷத்திலும் நிலை பெற்று நிற்பாரென்ற நிச்சயமில்லாத ; மனிதரை-மனிதர்களை, பாடி - கவிபாடி, படைக்கும் - அடையும், பெரும்பொருள் - ஒருக்கால் நீவிர் அடையும் பொருள் பெரிதாகாது, அப்படி நீங்கள் அடையும் பொருள் வெகுவாக இருந்தாலும், என்னாவது - எவ்வளவு பிரயோஜநப்படும். எத்தனை நாளைக்குப் போதும் - உம்முடைய செலவுக்குச் சிலகாலத்துக்குக்கூடப் போதாது. மின்னார்-சுவர்ணத்தால்செய்தபளபளப்பாயிருக்கும், முடி-கிரீடத்தைத் தரித்த, வானவர் தாதையை-நித்தியஸூரிகளின் நிர்வாஹகனான பகவானைப் பாடினால், தன்னாகவே - தனக்கே ஆள் உரிமையாகக் கொண்டு ஸ்வீகரித்து, அதாவது அவனது உகப்பே உங்களுக்கு வேண்டிய புருஷார்த்தமாக நீங்கள் நினைக்கும்படி செய்து, சன்மம் செய்யாமையும் - மற்றும் ஓர் பிறப்பில்லாமல் அவன்வயமே நின்று அவனுக்கே ஆள் செய்யும் பரம புருஷார்த்தத்தைக் கொடுத்து, கொள்ளுமே - உங்கள் பாபங்களை விடுத்து மோக்ஷ ஆனந்தத்தில் சேர்ப்பிக்கும்.

குறிப்பு:—பகவானுக்கு உகப்பாகக் கவிபாடுவதே சுவயம்பிரயோஜநமல்லவோவென்பது கருத்து. அவன் உங்களைத் திருத்திப் பணிகொள்வான்; அதுவேதான் அல்லவோ பெரும்பயன்.

5-ம் பாசுரம்.

கொள்ளும் பயனில்லை குப்பை
கிளர்த்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்து நும்வாய்மை
யிழக்கும் புலவீர்காள்

கொள்ளக் குறைவிலன் வேண்டிற்
றெல்லாந்தரும் கோதிலென்
வள்ளல் மணிவண்ணன் றன்னைக்
கவிசொல்ல வம்மினோ

அவதாரிகை:—மேல்லோகத்தில் பலந்தருமென்றீர், தற்காலம் எங்களுக்குத் தேஹயாத்திரைக்கு இவ்வுலகில் பொருள்படைக்காவிடில் எப்படியாகுமென்ன—இப் பாசுரத்தில், இப்போழ்தே புலவீர்காள் உங்களுக்கு ''வேண்டிற்றெல்லாம்'' அவனைச்சார்ந்தால் அளிப்பானென்று பதில் கூறுகின்றார்.

பதக்குறிப்புக்கள்:—கொள்ளக் குறைவிலன் - மேல் நோக்காய் கருதுமிடத்து, அபரிமிதமான செல்வத்தை உடையவன் எவ்வளவு உங்களுக்கு உதவினாலும் அவனது செல்வம் குறையாதென்று அர்த்தம் சொல்லலாம். இப்படி உரைப்பாருமுண்டு. ஆனால் இங்கு அந்தப்பொருள் ஏற்றதாகஇருக்கவில்லை ''வேண்டிற்றெல்லாம் தரும்'' என்று பின்வரும் அடைவுக்கு இவ்வர்த்தம் புனர்உத்தியாகும்; ஆகையால் இதற்கு வேறு பொருள் உசிதமாகும். அதாவது, நீங்கள் மனம் போனபடிஅவனது செல்வத்தையோகுணாதிசயங்களையோ எடுத்துரைத்தாலும் அவ்வளவும் பகவான் விஷயத்தில்அர்த்தவத்தாகுமேயன்றிப் பொய்க்காது; கவிகள் மனோகல்பனைகள் எல்லாம் பகவான் விஷயத்தில் ஸத்தியமாகும். அவர்களுடைய கவியோ மானிடர் விஷயத்தில் பொய்க்கும் - அதாவது சொற்கள் ஏற்கும் அர்த்தங்களால் குறைவிலன் - அவ்வர்த்தங்களில் குறைவுவாராதே பூர்த்திசெய்து கொள்ளக்கூடியவன். கொள்ளும் பயனில்லை - மனதால் நாம் பொருள்கள் எவ்வளவு பயனென்று நினைக்கிறமோ அவ்வளவுக்கு அந்தப் பொருள்கள் வாஸ்தவத்தில் பயன்கொடுக்கிற யோக்கிதை இல்லை என்பது தாத்பரியம். அச்செல்வமும் குப்பை கிளர்த்தன்ன - அச்செல்வத்தை ஈட்டிய மார்க்கத்தை ஆராய்ந்தால் அநேக பாவச்செயல்களால் வந்ததென்று காண்கையும் ஸம்பாவிதம் என்று ஒருவாறு செப்புகிறார்.

ஓர் அரசன் யுத்தங்கள்செய்து அநேகராஜ்ஜியங்களைப் பராக்கிரமத்தால் பிடித்துக்கொண்டான் என்று இருந்தால் அவன் அதர்ம யுத்தங்களாலும் மனுநெறி பிறழ்ந்தும்அவற்றைக் கவர்ந்துகொண்டானென்றுஆராய்ச்சியில் ஏற்பட,சம்பாவிதம் துதிகளாலேயே சிற்சிலஸமயம் வியங்கியார்த்தமாய்த்தோஷங்களும் பாபங்களும் தொனிகளாக ஏற்படக்கூடும். இவற்றைஎல்லாம் கவனித்துக் ''குப்பை'' கிளறுவதுபோல்,என்றார். குப்பை மோடிட்டுக்கும்பலாக மூடிகிடைக்கையில் அதில்பொதிந்துகிடக்கும் அசிங்கங்கள் வெளிப்படாமலும் துர்நாற்றங்கள் எழும்பாமலுமிருக்கும். கிளறினால் அசுத்தங்கள் புலப்படுவதுபோல் செல்வம் ஈட்டிய மார்க்கங்களை ஆராய்ச்சி செய்யுங்கால் அயோக்கிய முறையில் குவியல்களாகத் திரட்டிவைத்ததன்மை தெரியவரும். ஆகையால் செல்வத்தைத்தான் ஈட்டி என்ன பயன் என்கிறார்.

கோதில் என் வள்ளல்:-மனுஷ பிரபுக்கள் தாங்கள் ஏதேனும் புலவர்களுக்கு ஈந்தால், நாம் நன்கொடை கொடுத்தோம்,ஏனைய பிரபுக்கள் இம்மாதிரி எடுத்துக் கொடுக்கமாட்டார்கள்என்றுநினைத்துத் தங்களை இறுமாப்புடன் அதிகம் மதித்துக்கொள்வார்கள். அவ்வாறின்றி என்பிரபுவான எம்பெருமான் எவ்வளவு ஈந்தாலும் நம் பக்தனுக்கு அதிகம் என்னநாம் செய்துவிட்டோம் என்று கிலேசப்பட்டுக்கொள்வான். அளவற்ற திரவியத்தைத் தம் நண்பரான வஸிஷ்டரிஷி மகனுக்கு ஸ்ரீராமபிரானும், குசேல பக்தருக்கு ராஜ்ய சம்பத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவானும் அளித்ததை இரண்டு பிரான்களும் ஏதேனும் ஒரு பொருள் கொடுத்ததாக மதிக்கவில்லை என்பது ஞாபகத்துக்கு வரத்தக்கது. ''எம்வள்ளல்'' என்று பன்மையில் கூறாமல் ''என் வள்ளல்'' என்றுகூறியதற்குக் காரணம்யாதெனில்—இதுவரையில்ஆழ்வார் ஒரு ''புலவரே'' பகவானுக்கு இருப்பதாகத் தாத்பரியம். இப்பாசுரத்தில், பகவானைக் கவிபாட வாருங்களென்று ஆழ்வார் விளித்தபின்னர் இப்புலவர்கள்திருந்தி,பகவானைக் கவிபாடப்போகிறார்கள்.

உரை:—பிரயோஜந சூனியமான அல்ப விஷயங்களைக் கவிபாடி உங்களுடையஅழகிய கவிகளை வீணே இழவாமல் தன்னுடைய நிர்வதிக தோஷ லேசமுமில்லாத கல்லியாண குணங்களாலே உங்களுடைய கவிகளைக் கிருதார்த்தமாக்கவல்லனாய் உங்களுக்கு வேண்டிற்றெல்லாம் தரும் பரமோதாரனாய், தந்தாலும் ஒன்றும் செய்யாதவன்போல் இவர்களுக்கு என்செய்தோமென்றிருக்கும் ஸ்வாபனாய் ஆச்ரிதசுலபனாயிருக்கும் எம்பெருமானைக் கவிசொல்ல வாருங்கோள்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[755-வது பக்கத் தொடர்ச்சி]

சழக்கனே சாலும் பழி.

சூற்றிய சேலையால் அந்தகன் வாய்புதைத் திருந்த செய்கை, பயமுடைய தன் வினயத்தைக்காட்டுதற்கேனுமாகுக, மற்று, சூழ்ந்துவரும் நகையினைத் துவைத்து மறைத்தற்கேனு மாகுக—சிறியதோ பெரியதோ அவ் வாய், என்னுமோர் கேள்வி எஞ்சுகின்றது. 'பேழ்வாய் அந்தகன்' என்றும்,''பகுவாய்க் கூற்றுவன்'' என்றும், அவன் வாயினளவைச் சற்றே அதிகமாய்க் கருதவே மாந்தர் பண்டு கற்றிருக்கின்றனர். அதுவுமன்றி, அஞ்சன மனைய கருமையே மறலியின் மேனிக்கு மரபாயு மிருக்கின்றது. அவ்வாறிருக்க, காலனைப்போய்க் காமனுடன் மயங்கினரோ எனும்படி, ''சுற்றிய சேலையால் சிறிய வாய் புதைத்துச் செங்கையில்......''என்று அவன் வடிவினை அமைக்கப்புகுகின்றதன்மை யாதெனக் கம்பர் திகைக்க வைக்கின்றனர். இச்செவ்வியில் வாய்சிறுத்துக் கைசிவந்து காட்சிதருங் கோலம் காலனுக்குக் கிடைத்தது எவ்வாறென்பதைச் சோதிப்பவருக் கூடியமுளது. வழிகாட்ட வான்மீகிமுனிவரும் உளர்.

தீச்செயல் புரியும் இராவணன்மீது வெவ்வியசீற்றம் வடநூன் முனிவருக்கு வருதல் செவ்விதே. ஆதலின் ''பிறர் மனைவிகளைக் கற்பழிப்பவன்'' என்றும் ''வேதி

யர் வேள்வியைச் சிதைப்பவன்'' என்றும் வயின்வயின் அவன் கீழ்மையை வைவதுடன் ஆறாமல், "வாயைப் பிளந்துகொண்டு உட்கார்ந்திருக்கும் யமன்போல்பயங்கரமான இராவணன்'' கொலுவமர்ந்திருந்தானென அவன் உருவமும் பழிப்புற வெறுப்பவராகின்றார். வேண்டாதார் முகத்தினை விகாரமாக்குவது இயல்பே. எனினும் வாயைப் பிளந்துகிடக்கும் ஓர் நமனுடைய தோற்றம், உரைப்போர் வெறுப்பினாலன்றி, இராவணனுக்கு இன்றியமையாததன்று. 'வாய்கள்'எனப் பன்மையிற் பேசவேண்டியதையும் வான்மீகிமுனிவர் தமதொரு வெகுளியின் வேகத்தால் மறந்துவிட்டனர். தாம் மேற்கொண்ட கதைமுறைக்கேற்றபடி வான்மீகி முனிவர் இராவணனை இவ்வண்ணம் ஏசுவது வியப்பன்று. கதையைக் கூறுமொருவர் அதற்குரிய விருப்பு வெறுப்புக்களுடன் தம்மைக்கலந்துகொள்ளாமற்காத்தலரிது.

நாடகக் கலையினால் நவில்பவர் கம்பர். கலையுணர்ச்சியினுள் விருப்புவெறுப் பென்பதில்லை. நாடகபாத்திரங்களுடன் கலையுணர்வுடையோர் ஒருபோதும் கலந்துகொள்ளமாட்டார். நாடகக்கலைஞனாவோன், தான் கற்பித்து இயக்கும் பாத்திரங்களெவ்வொருவருமாகத் தானே அவ்வப்போது மாறிமாறி இயம்பவும் இயற்றவும் வைக்கவேண்டும் எனச் சாற்றுவார், கலைத்திறம் நுனிக்கும் ஆராய்ச்சியாளர்களில் ஒரு சாரார். இக்கொள்கை முற்றிலும் பிழையல்லாக் காலையினும் அரைப்பாகஉண்மையேஅடங்கப்பெற்றிருக்கின்றது. ஆங்கிலத்தில் ராபர்ட் ப்ரௌனிங் (Robert Browning) அனைய கவிகள், தம்மைத் தம் பாத்திரங்களிலிருந்து பிரித்துக்கொண்டு நிற்கின்ற பெருமையாலேயே தாம் கலையின்முதிர்ச்சி கைவந்தவர்கள்என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றனர். ஷேக்ஸ்பியரது கலையின் நுட்பமும் அன்னதே.இன்னவர்தம் நிகழ்ச்சிஅமைப்பின் செம்மையைக் காணுங்கால், இக் கலைஞர் தாமே தம் பாத்திரங்களாக மாறி இயங்கினாலன்றி இந்நன்னயம் பயக்க இயலாதென்னத் தோன்றலாகின்றது. இத்தோற்றத்திற் கேதுவாய கலையின் சூழ்ச்சியும் பொய்யன்று. இவ்வகையில் கடவுளையே ஒக்கின்றார் கலைஞர்கள். தன் படைப்பில் "யாவுமாய் அல்லவுமாய்'' நிற்கின்ற கடவுளேபோல் நாடகக் கலைஞர்களும் தாம் படைத்த பாத்திரங்கள் போலவும் அவைகளுக்கு வேறாகியும் நிற்கவல்ல நலம் வாய்ந்தவர்களாகின்றனர். இவ்வாறு நிற்றலாற்றான் நாடகத்தின் சுவை நன்கு பெருகுகின்றது. உட்புகுந்து கலப்பதுபோன்றவோர் சூழ்ச்சியால் ஒன்றன் உண்மை உள்ளவாறு புலப்படுவதாக, மற்று, பிரிந்துநிற்கும் பெற்றியால், அவ்வுண்மையின் தன்மை உவத்தலுங் காய்தலுமின்றி உணரப்பெறும். ஆதலின், கலைநயம் முதிர்ந்த கருத்தினோர், தீமையைக் கண்டு இரங்குவார்களேயன்றித் தீயோரைக் கண்டு இகழமாட்டார். "தீவினைதான் நீ தந்ததன்றோ'' என்றும், "அவுணர்தாம் நின்னடிமையல்லரோ'' என்றும் கேட்கின்ற மேன்மை கலையிற் கனிந்த மனத்திற்கே உரியது. "பெரியோரை வியத்தலுமிலமே சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே'' என்றுமுன் ஓர் புலவரை விளம்பவைத்ததும் முதிர்ந்தவொரு கலையுணர்வின் மாட்சியே.

ஆதலின் கம்பர், இராவணன் இருக்கையை இயம்பினரன்றி அவன் இயற்கையை இயம்பவில்லை. கன்னியர் கற்பிற்கும் அந்தணர் வேள்விக்கும் இவன் கள்வனாய்க் கிடந்த செய்தியை மறவாமல் நினைவிற்கொண்டு இப்பொழுது இங்கு அறைவானேன். திருமாலின் நெடிய நேமியால் நூறுமுறை இவன் அடிபட்டகுறைவையும் இங்கு உரைப்பானேன். இவ்வரிசைச் செய்திகளை வான்மீகிமுனிவருக்கே செப்புதற்கு நனிவிட்டுவிட்டுக் கம்பர், இராவணன்தன் ஆற்றலையும் அவ்வாற்றலால் பெற்றுழன்ற வோர் மாயப் பெருவாழ்வின் தோற்றத்தையும்மட்டுமே காட்டுவாராயினர். இத்தகைய சித்திரத்தில் இராவணன், தன் "வாயைப் பிளந்துகொண்டு யமனைப்போல் பயங்கரமாய்'' உட்கார்ந்திருப்பது சற்றேனும் பொருந்தவில்லை. வான்மீகிமுனிவர் வழங்கிய அவ் வுவமையைக் கம்பர் அடியுடன் மறக்கவேண்டுமென்னும் ஆவல் உடையவராயிருக்கின்றார். மற்றிதற்கென் செய்வது? "வாயைப்பிளந்துகொண்டு இராவணன்தான் எமனைப்போல்உட்கார்ந்திருக்கவில்லை'' என்று தம் நூலில் எடுத்துச்சொல்வதோ ஏற்புடைத்தன்று. மற்று, "இராவணன் மன்மதனைப்போல் வீற்றிருந்தான்'' என்பதோ எவ்வாற்றானும் பொருந்தாததுமன்றி வஞ்சப் புகழ்ச்சியாக வழங்கியது மாகும். ஆதலால், இராவணன்உருவத்தி லொன்றும் பிழைதிருத்திக் காட்டாமல், அங் கவனுக்கு உவமையாய் நின்ற கூற்றுவன்றன் வடிவத்தில் கம்பர் கைவைத்தார். வைத்து அவன் பேழ்வாயினைச் சிறியவோர்வாயாகத் தீட்டிவிட்டார். "கூற்றுவன் போல்வான் அல்லன்காண் இராவணன்'' என்று வெட்டென மறுப்பதற்கு மாறாக, அக்கூற்றுவன்தான், "சாலச் சிறிய வாயினன்'' என்று சாற்றுமிது ஒருவாறு குறும்புடைய சூழ்ச்சியேயாமெனினும், இவ்வண்ணம் இங்குக் குறிப்பினாற் கூறுவதன்றிக் கம்பருக்கு வேறுவழி யில்லாமை வெளிப்படை. இங்ஙனம், வடமொழியாளர்க்கும் தமிழ்மொழி வாணர்க்கும் நிகழ்ந்தவொரு கலைமலி பூசலுக்கிடையே தன் வாய் சிறுத்தபரிசினை நினைக்க நினைக்க விளையும் சிரிப்பைத்தான் புதைப்பதற்கோ காலன் தன் சிவந்த கையினால் அந்தச் சிறிய வாயினைப் பொத்திவரலாயினான்! அல்லது, தன் புதிதுபெற்ற இச் சிறியவாயைக் காட்டுதற்குத்தான் கூசினனோ அக்கூற்றுவன்! மற்று, பெரியதொரு வாயே தனக்கிருக்க அதனைச் சிறியதென்றுகூறிய கம்பர்பொய்யினை மற்றவர்கண்டுகொள்ளாவண்ணம் காப்பதற்கேதானோ—யார் அறிவார்!

சிறியதோ பெரியதோ, பொத்திய வாயுடை அக்கூற்றுவன் கடிகை கூறிக்கூறிக் காலத்தினை அளந்து கழித்திருக்கு மகவயின்,

> கங்கையே முதலிய தீர்த்த கன்னியர்
> கொங்கைகள் சுமந்திடை கொடியி னொல்கிடச்
> செங்கையி னரிசியு மலருஞ் சிந்தினர்
> மங்கல முறைமுறை கூறி வாழ்த்தவே

[கங்கை முதலிய புண்ணிய தீர்த்தமங்கையர், முலைகளைச் சுமந்து தம் இடை கொடிபோல் நுடங்க வந்து, தம் சிவந்த கைகளால், அக்ஷதையும் மலரும் இராவணன்மேல் தூவி முறைப்படி மங்கலமொழிகள் கூறி வாழ்த்தவும்—]

> ஊருவிற் றோன்றிய வுயிர்பெய் யோவியங்
> காரினிற் செருக்கிய கலாப மஞ்ஞைபோல்
> வார்விசிக் கருவியோர் வகுத்த பாணியி
> னாரிய ரருநட நடிப்ப நோக்கியே

[நாராயணனது தொடையிலிருந்து பிறந்தவளும், உயிரமைந்த சித்திரம்போன்றவளு மாகிய ஊர்வசியானவள்,

மேகத்தைக்கண்டு களித்த கலாபமுடைய மயிலைப்போல், வார்கட்டிய இசைக்கருவிகளையுடையவர் அமைத்த தாளத் திற்கிணங்க ஆரியக்கூத்தை அருமையாக நடிப்பதைப் பார்த்துக்கொண்டும்]

இருந்தன னுலகங் ளிரண்டு மொன்றுந்த
னருந்தவ முடைமையி னளவி லாற்றலிற்
பொருந்திய விராவணன் புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே

[தான் செய்த அரிய தவத்தாலும் தனக்கு இயற்கையாயிருந்த ஆற்றலாலும் மூன்று உலகங்களையும் தன் உடைமையாய்ப் பெற்ற இராவணன், வில்போன்ற புருவங்களையுடைய கரிய பெரிய மாதர்களின் பார்வைகளாகிய வெள்ளத்திற்கிடையே வீற்றிருந்தான்]

எனக் கம்பர், இராவணன் கொலுவிருக்கும் வருணனையை முடிவிற்குக் கொண்டுவருகிறார். அம்முடிவிலும், இராவணனது அருந்தவமும் அதன் ஆற்றலால் அவன் மூவுலகும் பொருந்தப்பெற்றிருந்த பெருமையும் மட்டுமே நினைவுபடுத்தப்படுகின்றன. இதற்கெதிர்,

'நல்லாடை புனைந்து நற்கலன் அணிந்து நற்றார்சூடி, காலகாலன் உட்கார்ந்திருப்பதுபோல, அரக்கர் மன்னவனும் புலஸ்தியவம்சத்தின் கொழுந்துமான தன் தமையன் இராவணன் வீற்றிருப்பதைச் சூர்ப்பணகை கண்டாள். மந்திரிகள் புடைசூழ, உலகத்தை அழிக்கத்தகுந்த ஆண்மையோடு உட்கார்ந்திருந்த அவ் விராவணனைக் கிட்டி......'

என்று வான்மீகிமுனிவர் முடிப்பதை ஒப்புநோக்குமிடத்தும், அவனது "அழிக்கத்தகுந்த ஆற்றலை" மாற்றி, "உலகங்களைப் பெற்றிருந்த ஆற்றலை"க் கம்பர் குறிப்பதன்பொருத்தமுந் தெரியவரும். இராவணனுக் கேற்ற வசை அவனது ஆற்றலும் செல்வமும்மற்றுள வைபவங்களுமே போதியதாயிருக்க, அவ் வாற்றல் செல்வ வைபவங்களை வேறு சிலசொல்லி வைவானேன் என்பதனை ஓராமல் வான்மீகிமுனிவர் தாமே புக்கு இராவணனைப் பழிக்கின்றார். கம்பருடைய சித்திரத்திலோ தனக்குப் பழி தானேயாய் நிற்கின்றான் இராவணன். கதைமுறைக்கும் நாடகக்கலைக்கு மிடைகிடக்கும் வேற்றுமை இது.

இன்னவாறு வீற்றிருக்குமவ் விராவணன்முன் அவனருந்தங்கை சூர்ப்பணகை வந்து தோன்றலாவதைக் கம்பரினி விளம்பலுறுகின்றார்—

தங்கையு மவ்வழித் தலையிற் றாங்கிய
செங்கையள் சோரியின் றாரை சேர்ந்திழி
கொங்கையள் மூக்கினள் குழையில் காதினள்
மங்குலி னொலிபடத் திறந்த வாயினள்

[இராவணன் தங்கையான சூர்ப்பணகையும், அப்பொழுது தலைமேல் வைத்த சிவந்த கைகளையுடையவளும் இரத்தம் சிவந்துபெருகும் முலைகளையுடையவளும் மூக்கையுடையவளும், குழையில்லாத காதையுடையவளும், மேகம் போன்று முழங்கத் திறந்த வாயையுடையவளுமாகி]

முடிமிடை வாயிலின் முறையிட் டார்கலிக்
கடையுகக் கடலொலி காட்டக் காந்துவாள்
குடதிசைச் செக்கரிற் சேந்த கூந்தலாள்
வடதிசை வாயிலின் வந்து தோன்றினாள்

[அரசர்களுடைய கிரீடங்கள் நெருங்கிய அரண்மனை வாயிலில், முறையிட்டுக்கொண்டு, யுகமுடிவின் கடல்போன்று கதறும்படி மனம் தவிப்பவளும் மேற்குத்திசையில் காணப்படும் அந்திச் செவ்வானம்போலச் சிவந்த கூந்தலையுடையவளுமாய் வடக்குவாயிலில் வந்து தோன்றினாள்]

தோன்றலுந் தொன்னக ரரக்கர் தோகையர்
ஏன்றெதிர் வயிறலைத் திரங்கி யேங்கினார்
மூன்றுல குடையவன் தங்கை மூக்கிலள்
தான்றனி யவள்வரத் தரிக்க வல்லரோ

[வந்து கண்டவளவிலே பழைய அந்த இலங்காபுரியிலுள்ள இராக்ஷஸமாதர் எதிர்கொண்டு சென்று அவளெதிரில் வயிற்றில் அடித்துக்கொண்டு சோகித்து அழுதனர். மூன்று உலகங்களையும் தன் உடைமையாகப்பெற்ற இராவணனது தங்கை மூக்கு இல்லாதவளாய், தனியே வரக் கண்டு சகிப்பரோ]

பொருக்கென நோக்கினர் புகல்வ தோர்கிலர்
அரக்கரு மிரைத்தன ரசனி யாமெனக்
கரத்தொடு கரங்களைப் புடைத்துக் கண்களை
நெருப்பெழ விழித்துவாய் மடித்து நிற்கின்றார்

[இராக்ஷஸர்களும் அவளைத் துண்ணெனப் பார்த்து, சொல்வது இன்னதென்று அறியாமல் இடிமுழக்கம்போல் பேரொலி செய்து, கைகளோடு கைகளை அடித்து, தீப்பொறிபறக்கக் கண்களை விழித்து உதட்டைக் கடித்துக் கொண்டு நிற்பவரானார்]

எனினும், "இத்தீங் குனக்கு நேர்ந்த தெங்ஙனம்" என அவளையே உற்றெவரும் கேட்கத் துணிந்திலர்களாய், இது செய்தவர் யாவரே என்றும், எற்றுக்கிது செய்தனரென்றும் தாமே பற்பலவாறு ஊகிக்கத் தலைப்படுகின்றனர். முதலில்,

இந்திரன் மேலதோ வுலக மீன்றபே
ரந்தணன் மேலதோ வாழி யானதோ
சந்திர மௌலிபாற் றங்கு மேகொலோ
அந்தர மென்றுநின் றழல்கின் றார்சிலர்

[சிலர், இந்தத் தீமையும் இந்தத்தீமையைச் செய்ததால் முடிவடைந்து அழியநிற்பதும், இந்திரனைச் சார்ந்ததோ, உலகத்தைப்படைத்த பிரமனைச் சார்ந்ததோ, திருமாலைச் சார்ந்ததோ, சந்திரனை முடியில் தரித்த சிவபிரானைச்சார்ந்ததோ-என்று சொல்லிநின்று கொதிக்கின்றவ ராயினர்]

எனினும், இதனை ஒவ்வாது,

போரிலான் புரந்தர னேவல் பூண்டனன்
ஆருலா நேமியா னாற்ற றோற்றுப்போய்
நீரினு னெருப்பினன் பொருப்பி னுனினி
யார்கொலா மீதென வறைகின் றார்சிலர்

[சிலர், இந்திரனோ இராவணனுடன் போர்செய்ய மாட்டாமல் ஏவலாளனாக அமர்ந்தனன். ஆர் பொருந்திய சக்ராயுதத்தையுடைய திருமால் வலிமையில் தோற்றுக் கடலிற்போய் ஒளிந்துகொண்டனன். நெருப்பைத் தன் கையிலேந்திய சிவபிரான், இவ்வாறே, மலையில்போய் ஒளிந்து கொண்டனன். எனின், இது செய்தவர் யார்? என்று சொல்பவராயினர்]

இதனைக் கேட்டு,

செப்புறற் குரியவர் தெவ்வர் யாருளர்
முப்புறத் துலகமு மடங்க மூடிய
விப்புறத் தண்டத்தோர்க் கியைவ தன்றிது
வப்புறத் தண்டத்தோ ராமென் றார்சிலர்

[சிலர், சொல்வதற்கும் தகுந்த பகைவர் இராவணனுக்கு யாரிருக்கின்றனர். மூன்றுவகை யுலகங்களையும் அடக்கிக் கவிந்திருக்கும் இவ் வண்டகோளத்தி லிருப்பவர்க்கு இது இயல்வதன்று. ஆதலால், இதனைச் செய்தவர், வேறேயோர் அண்டத்தில் இருப்பவர்களே ஆகவேண்டும், என்றார்]

அவர்தானு மென்ன!

என்னையே யிராவணன் றங்கை யென்றபின்
அன்னையே யென்றடி வணங்க லன்றியே

உன்னவே யொண்ணுமோ வொருவ ராலிவள்
தன்னையே யரிந்தன டானென் றார்சிலர்

[சிலர்—என்னசொல்கின்றீர். இராவணன் தங்கை என்பதைத் தெரிவித்தபின்பு, அப்புறத்து அண்டத்தராயிருப்பினும், எம் தாயே என்று இவள் காலில்விழுந்து வணங்குவதன்றி, இவளுக்குத் தீங்குசெய்ய யாராலும் நினைக்கத்தான் கூடுமோ! ஆதலால், இவள் தன் மூக்கு முதலியவைகளைத் தானே அறுத்துக்கொண்டவள் ஆதல்வேண்டும்—என்று கூறினர்]

தன்னையே தான் இவள் எற்றுக்கு அரிந்துகொண்டிருக்கவேண்டுமென்பதற்குக் காரணங் காணல் அரியதாயிற்று. ஆதலின்,

சொற்பிறந் தார்க்கிது துணிய வொண்ணுமே
இற்பிறந் தார்தமக் கிவைவ செய்திலள்
கற்பிறந் தாளெனக் கரன்கொ லாமிவள்
பொற்பிறந் தாக்கினன் புகன்றென் றார்சிலர்

[சிலர், புகழுடைய குடியில் பிறந்தவரைப்பற்றி இது சொல்லத்துணிவது தகுதியன்றுதான்—ஆயினும் நற்குடியில் பிறந்தவர்க் கேற்றபடி ஒழுகாதவளாய் இவள் கற்புநிலை கடந்தாளென்று கரனேதான் இவள் அழகு அழியும்படி இது செய்தானோ, என்று சொன்னர்கள்]

பலபேர் கூடி ஒன்றினைப் பற்றிப் பற்பலவாறு பன்னத் தலைப்படுவாராயின் அவர்களை யறியாமலே உண்மையிற் சிறிது ஒருவாறு ஒருபோது அச்சொற்களுக்கிடையே பிறக்கவும் பிறக்கலாம். இங்கு, அரிந்தவன் கரனல்லனாயினும், அவள் மூக்கு முதலியன இழந்ததன் காரணம் கற்பிறந்ததே என்பது எவ்வாறோவெளிவந்துவிட்டது. ஒன்றும் முடிவாகக் கூறுதற் கியலாதாதலின், மீண்டும்,

தத்துறு சிந்தையர் தளருந் தேவரிற்
பித்துற வல்லரே பிழைப்பில் சூழ்ச்சியார்
முத்திறத் துலகையு முடிக்க வெண்ணுவார்
இத்திறம் புணர்த்தன ரென்கின் றார்சிலர்

[சிலர்—தடுமாறும் மனமுடையவர்களாய்த் தளர்கின்ற தேவர்களிலும் பைத்தியம் பிடிக்கக்கூடியவர்கள்தாம், தாம் பிழைத்திருக்கும் வழியினையாதவர்களாய் மூன்றுவகை உலகங்களையும், இராவணனுக்குக் கோபமூட்டி, அழிக்கக் கருதி இப்படிச் செய்திருக்கவேண்டும்—என்கின்றார்]

பின்னரும்,

இனியொரு கற்பமுண் டென்னி னன்றியே
வனைகழல் வயங்குவாள் வீரர் வல்லரோ
பனிவருங் கானிடைப் பழிப்பி னோன்புடை
முனிவரர் வெகுளியின் முடிபென் றார்சிலர்

[இனி வேறொரு கற்பகாலம் உண்டானாலன்றி, அணிந்த கழல்களையும் விளங்கும் வாள்களையும் உடைய வீரர் இந்தக் கற்பத்தில் இது செய்யவல்லவர் இருக்கின்றார்களோ. ஆதலால், பனி தங்கிய காட்டில்பழிப்பற்ற தவம் செய்யும்முனிவர்களது கோபத்தின் பயனேயாம்—என்றார் சிலர்]

பொதிகை நிகண்டு

[751-வது பக்கத் தொடர்ச்சி]

பண்பு பற்றிய பெயர்த்தொகுதி

வடிவளவு வண்ணமொடு காட்சிகருத் தைந்து
வகைபண்பாம் பருதிதட்டு நேமிகொம்மை வலையங்
கடகங்கோ ளகைசில்லி யாழிமல்லம் பாண்டில்
கடுந்திகிரி மண்டிலஞ்சக்க ரம்விருத்தம் வளையம்
அடிகொள்பா லிகைபதினேழ் வட்டவடி வாகு
மரியடர்பி யைமைமூன் றேதகட்டு வடிவாங்
குடிலங்கூன் கோண்கோட்டம் வளைத்தல்வணர் வாங்கல்
குலவல்தட்டுக் கோணல்வளா வலும்வளைவா மவையே.
அவைதொழுதி குழுக்கோட்டந் தோடுசெங்கங் கூட்ட
மடர்சமூகந் திரள்குவிதல் மொய்கணை நிகாயஞ்
சவைகுவால் சமுதாயங் *கழுமல்குப்பை கதம்பஞ்
சமவாயங் கருவிநிவ கங்குவ விராசி
குவைகுழாந் தொகுதிதொகை மூவொன்பா னென்றாங்
குழல்சுகிர்நாள் வேய்நாளி தூம்புபுரை வேணுத்
துவனுடி சுரைதுளையே புழல்புழை துவாரஞ்
சுரிகையடை தமராகுங் கற்றைகதிர்த் திரளே. 268.
திரட்சிகணை குவவுகொம்மை சேர்த்துறுமல் சோகஞ்
சேடுபுஞ்ச மாழைவட்டுப் பிழம்புமுண்டங் குழிய
முரத்தபந்தந் தொழுதிபிண்டம் பூகமுத்தை குவித
லுண்டையுமாம் படலைபம்பல் படர்ச்சிபரந் தனவாந்
தரப்புளகங் குமிழ்ப்புமொக்குள் கொப்புளாம் பிணரே
சற்சரையாம் பயினிசங்கங் குவிதல்கூ டுதலாம்
பரப்பமுவம்†பப்போவில் பரவைபாப் பரவல்
பாய்தல்தா வுதல்ஞெமிர்தல் விரிவுவிசா லமுமே 269.
சாலநனி‡கதழ்வதிகம் விதப்பூகம் பெருகல்
தவம்புதுமை மதம்பிறங்க லிறப்பமலை$யூங்கு
சீலமிகை யலைபூரிப் பான்றல்கூர் கழுமல்
சிறப்புருத்தல் பொங்கலின்பேர் பெருமைமாத் தடங்
மால்கருமை பகடேந்தல் பாடிருமை மோடு [கோன்
வால்குவவு தகைபொழில்பீ டண்ணல்பணை யீடு
மேல்கயவு நனிபாழி வீறுசெம்மன் மானம்
வியன்மூரி மூடலைநா*லேழொன்றுன் னுகவே. 270.
உன்னதமே டொழுக்கமுச்சம் பரிசிமிர்ப்புப் போக
லுத்துங்க மிசையேந்த லோங்கல்கப்புத் தூங்கல்
மன்னுதலே புரையூக்கம் பிறங்கல்புங்க நிவப்பு
வார்தல்சேண் சிகரமிரு பானிருபே ருயர்வாம்
பன்னமதுப் பருமைபரூஉப் பீனமுமா மகறல்
பாழியார்ப் பாய்வுதடம் வியலகலு ளான்ற
லென்னுமெட்டு மகலப்பேர் கண்ணறைபா ழியுமா
மிருசுநேர் செம்மைசெப்பஞ் செவ்வைசெவ்வ னணங்கே
அணுநுணுக்கங் கூர்முளரி†மைநுவணை நூழை
யாய்தலயி ரோய்தலுயிர் முன்னுணங்கு நுட்பம்
நுணுகுநொசி நுண்மையின்பேர் நுனியுமாஞ் சின்ன
நூலியிறை கன்றுசு கலந்தோகந் தன்னங்
கணம்வறிதிட் டிமையொட்டீ ராறுமற்ப மாகுங்
கலிதூரஞ் சேண்சேய்மை யாம்வடிதல் போகல்
குணியொழுகா யதந்தீர்தல் வார்தல்வரி யுறையே
கொடிநேர்பு நெடுமைநெடி நீளப்பேர் முடிவே. 272.
முடிவகலம் யாவடங்கல் சமத்தமனைத் தகண்டம்
முழுவதுமுற் றடையமுட்ட மெல்லாம்பன் னோர்பேர்
மிடைவுதுற்றல் செறிபொதுளன் மிண்டல்பம்ப னிபுடம்
விரளநிரந் தரந்துன்ற லடர்திணுங்கு துதைதல்

* குழுமல் (பி - ம்)
† பப்போவல் (பி - ம்)
‡ கதழ்வனிகம் (பி - ம்)
$ பூங்கு (பி - ம்)
* லேழெனவுன் (பி - ம்)
† நுழைநுவணை (பி - ம்)

சடிலநனி துறைதுறுமல் துன்னனெருங் குதற்பேர்
  ததைலுடன் பதினெண்பா னுந்தேய்வு நிரப்பே
யொடிவுதவ லீனமரு குதலஃகல் சிறுக
  லோய்வுகுன்ற லீறுசிங்க லூனமெஞ்சல் குறைவே.

குறைவில்பூ ரணந்திளைத்தல் கமந்தெவிட்டன் மலிதல்
  குளிர்ததும்பல் பரந்துவன்றல் கெழுத்திகழ்த லார்த
னிறைவுபிறங் குதன்முழுத்தல் செகிழன்மல்கல் கழும
  னிரம்பலே தெவிழல்பெரு குதலிருபான் பேரா
மறைவில்பங்கு பயல்பாகம் பகுதியத்தங் கூறு
  வாரம்பால் பாதியின்பேர் சீர்க்குருனாட் பதிகம்
பொறைகனம்பா ரமுமாருந் துவந்துருவந் தோன்றல்
  புவியினிற்ற லாநொய்மை யிலகுநொவ்வி லேசே. 274.

இலகுமென்மை சுகுமார மிருதுவா மளவை
  யின்மையின்பே ரனந்தமு மபாரமுமா னமுமாம்
பலவளவை கடன்கச்ச மளவாமா லம்பம்
  பற்றுக்கோ டேற்றந்தூக் கந்துதண்ட மாகுந்
தலைமுதலக் கிரமோனை பூருவமுன் னுதி
  தாளெழுவா யடியாகுங் கடைமுடிவீ றிறுதி
நலமுகிவு முற்றந்த‡மொல்லையின்பேர் நாப்ப
  ணள்ளிடைநாச் சமன்பகல்மத் திமத்தின்பேர் வரையே.

வரைவுதுணை தனையவதி காறளவு தாறு
  மானமட்டுப் பிரமாண னோகமபு காலை
பரியந்த மேணிகோ தணங்கர்டங் கொற்றம்
  பதினெட்டா மெல்லையின்பேர் நிரல்பந்தி யோளி
நிரையாங்கூர்ப் புக்களிப்புள் ளதுசிறத்த லாகு
  நீமமரி தெளிர்தயங்கல் காந்திநகல் சோதி
விரியல்வயங் குதல்விளங்கல் மின்னிலவு வெயில்வாள்
  வில்வாம நிழலலங்க லொடித்தலில குதலே. 276.

இலங்கலிமைத் திடலொளிர்தன் மிளிர்துளங்கல் பிறழ்த
  லெற்கிரண மவிர்தல்சுடர் தேசுநகை தாமந்
துலங்கல்கதிர் மின்னல்பிர காசமுப்பத் தாறுஞ்
  சுக்கிலங்கௌ ரவங்குருகு வெள்ளிவால் குருத்து
நலஞ்செய்விளர் சிதம்பாண்டு பாலசுவஞ் சுவேத
  நரைதவளஞ் சுசிசீதம்$பான்மையபு தார
மலங்குபாண் டரம்விசிதம் வெளுப்புவெள்ளை விளக்க
  மருச்சுனஞ்சுப் பிரமிருபா னைந்தும்வெண்மைக்கருளே.

அருணஞ்சேய் சேப்பரத்தஞ் செக்கர்துவர் சோண
  மரக்குப்பா டலம்பூவல் சேதுதுப்ப ராகங்
குருதியத்துச் சிந்துரமு லோகிதமஞ் சிட்டங்
  குறிசெந்து சிவப்பேயிங் குலிகமுஞ் செந் நிறப்பேர்
கருள்காளங் காளகமை களங்காரி கார்மா
  கறைநீலங் காளிமமா லஞ்சனமே மாய
மிருளசித மீரெட்டுங் கறுப்பின்பேர் களங்க
  மிழிபுகறை கசடுமா லிவைமலினப் பசையே. 278.

பசுமையரி தஞ்சாமம் பாசரி*பலாசம்
  பைதரித்துச் சாமளம்பை பத்தாம்பச் சையின்பேர்
நிசியரித்தி ராபம்பீ தகம்பீதம் பொன்மை
  நிறப்பேர்பிங் கலம்பசலை பசப்புமாங் கபிலம்
வசிபுகர்புற் கெனல்புன்மை புற்குரா னிறமாம்
  வரிபுகர்கேழ் பசப்புவண்ணஞ் சாயல்சந்த மாமை
கசிவருண மேனியுருக் குருவடிவு நிறப்போ
  கட்டழகு விசித்திரப்பே ரழகலங்கா ரமுமே. 279.

காரிகைபொன் சந்தந்தே சிகஞ்சொக்கு மஞ்சு
  காமரொண்மை வாமம்பூத் தகைதளிம மாழை
யாரிகவின் மயம்விடங்கஞ் சுபஞ்செழுமை காந்த
  மந்தம்நவ்வி மணிவனப்புக் கோலநன்கு மாமை
யேரணிநல் யாணர்வண்ணம்புலன்சே டிராம
  மெழின்மாதர் குருகுபொற்புச் செவ்விதொட்டி பாங்கு
தேரணங்கு சுந்தரம் பத் திரமம் மே னோக்குச்
  சித்திரம னோகரமு மழகேழேழ் தருமே. 280.

தருணங்கோ மளங்கொம்மை குழவுவெண்மை நாகு
  தகைமழவு குருளைவிண்போ தகம்புருவை யவன
முருகிளைசு பதினைந்து மிளமையின்பேர் விருத்த
  முற்றன்மூப் பாமமுங்கல் புல்லெனன்மட் கலுமா
முரமறிவு தெளிவுபுந்தி புலன்போத மேதை
  யுணர்வுமதி காட்சிஞா பகந்தேறல் சீலந்
தெருளச்சே தனஞ்சைதன் னியஞான மாகுந்
  தெளியும்பே ரறிவு முதுக் குறைவாமென் றறியே 281.

அறியாமைப் பேரசே தனமாகு மூரி
  யடல்கூளி மீளிகோன் முடலையும்பல் வாய்மை
விறலீடு நலந்தீரந் திண்மைமைந்து நோன்மை
  மெய்யூக்க மிடலாண்மை மொய்ம்புவலி மல்ல
லெறும் மதுகை தானமதஞ் சத்துவந்துப் பாற்ற
  லேணமுர ணுரந்தோற்றந் தாவுதா மானந்
திறல்பாழி மூன்புவயம் பலமுடுகல் மல்லாய்ச்
  செப்புநாற் பான்மூன்றும் வலுவெனச்சொல் வீரே 282.

வீரியம் பராக்கிரமஞ் சவுரியஞ்சே வகமே
  வீரப்பேர் வென்றிவலன் கொற்றமுல்லை வாகை
போர்விசையஞ் சயமாடு விறல்புகல்வெற் றியின்பேர்
  பொறியாக்கந் திருப்பெருக்க மிடம்வாழ்க்கை விபவம்
சீர்விருத்தி வெறுக்கைமா டியற்கைசெல்வப் பேராஞ்
  செழுமைசால் பான்றல்வள நிறைமாண்பு வாய்த்த
னேரமைதி மாண்மாண்டன் மாட்சிமைப்பேர் பத்தா
  நிலையழிவு தோல்விதோற் றிடறுலைவாங் கனியே283.

கனிகிருபை தகவிரட்சை போர்மையரு ளிரக்கங்
  கருணைதயாத் தயவின்பேர் தூய்மைசுத்தந் துப்பு
புனிதம்பா வனந்தூய்து வேத்தியந்தூய் சவுசம்
  பூதமே பவுத்திரமுஞ் சுசியின்பேர் சாந்தம்
பனிதளிதண் மழைசீத நளிர்குளிர்சீ தளப்பேர்
  படுங்கடுமை கோரம்வெம்மை யுருமம்வெம்ப லுருப்ப
மனல்கரு மந்தாபம் வெப்பழுமுட் டிணப்பே [மன்றே.
  ரடைவளப்பங் கொழுமைசெழு மையுங்கொழுப்பா
அன்பின்பேர் நாரீரம் பரிவார்வ நேய
  மளிபாசம் பற்றுணங் காதல்புரி வாகு
நன்பவமேழ் துடருமன்பே யுழுவலா மகிழ்ச்சி
  நகைகடிசம் மகமலர்ச்சி சுகந்தொய்யில் கட்டி
யின்பமுமா னந்தமதா மேம முமற் றதற்கா
  மிறுமாப்பெக் களிப்பேமாப் பபிமானந் தந்து
பின்புமத்தஞ் செம்மாப்பு தருக்குமதர் செருக்குப்
  பெருமிதம்வீற்றிருத்தல்பா டவமலர்ச்சி களிப்பே. 285.

களியகநெஞ் சுளமுள்ள மிதையமே யுன்னங்
  கருதுசித்த மனத்தின்பேர் சிந்தனைதி யானந்
தெளிநினைவிங் கிதங்கருத் துச் சூழ்ச்சியெண்ணங் குறிப்புச்
  சிந்தைநாட் டிய முமாம் வலித்தன் முன்ன லூக
மூளல்படர்தல் சிந்தித்த னினைத்தலுள்ள லூழ்த்த [தலல்
  லுன்னலின்பேர் புகறலெண்ணல் பேணல்சுட்ட னு
வளர்க்குதல்கா ணல்கண்ணல் குறித்திடலெட் டாகும் [யே.
  வரையறுத்தல் குணித்தல்கணித் திடலெனவே பொறி
பொறைசகித்தல் சமைநோன்றல் சமித்தல் பொறுமையின்
  பொறையின்மைகூர் நோனமை பொறுமையின்பேர் [பேர்
நறுமை நன்கு நயஞ்சேடு விழுமநன்னர் யாணர்
  நலமணியுத் தமநன்மை கடவுளொண்மை நன்று
முறுதியின்பே ருண்மைவரன் முறைநியதி தெய்வ
  மூழ்விதிப்பே ருறுநோன்பு தவன்விரதந் தவப்பே
ரறமுதவி தருமமே னுடைமை தன்மமாகு
  மாணையின்பே ரேவலா மமைவாமென்பதுவே. 287.

‡ மொல்லை பின்பேர் (பி - ம்)
$ பான்மைய (பி - ம்)
* பவாசம் (பி - ம்)

§ முறுதியுமா முண்மைவரன் (பி - ம்)

கைகவை - வைகை.

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ் சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமாகிய நமது இந்தியநாட்டில் ஆதிகாலந் தொட்டு அளவிடற்கரிய மகிமை வாய்ந்த ஸ்தலங்கள் ஏழு. அவைகளாவன —(1) அயோத்தி (2) மதுரை (3) மாயை (4) காசி (5) காஞ்சி (6) அவந்தி (7) துவாரகை. இவற்றுள் சிலநகரங்களின் பெயர்கள் காலாந்தரத்தில் மாறுபட்டுத் தற்காலத்தில் வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. சிலவற்றின் பண்டைக்கால எல்லைகள் மாறுபட்டுக் கிடக்கின்றன. எனினும் அத்தலங்களின் தெய்வீகத் தன்மை சிறிதும் மாறுபடாமல் இன்றைக்கும் பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்களுக்கு மனவமைதியை யளிக்கும் புனித ஸ்தானங்களாய் விளங்குகின்றன.

அத்தகைய தலத்தில் தலைசிறந்தது தென்னிந்தியாவிலுள்ள மதுரையம்பதி. முதலிடை கடைச் சங்கங்கள் உலவப்பெற்றதாய் ஸச்சிதானந்த ஸ்வரூபியான ஸர்வேச்வரன் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் புரிந்ததுமான இம் மதுரைமா நகரின் மஹிமையை ஆயிரம்நாப்படைத்த ஆதிசேஷனாலும் வர்ணிக்க முடியாதென்றால் கேவலம் அசேதனனான என்போலியரால் முடியுமோ? முடியாது என்றாலும் பிறவியிற் சிறந்த மானிடப் பிறவியின் பெரும்பயன் பசுபதியின் சிதவிலாஸ ஸ்வரூபங்களைக் காண்பதும், புகழ்வதும், பூஜிப்பதும், அவரது லீலா விபூதிகளைச் சிரவணஞ்செய்வதுமேயாதலால் ஏழையேனு லியன்றவரை ஆலவாய் அண்ணலின் ஆநந்தக்கூத்தொன்றை, கரிய இருளை நீக்கும் கதிர்மதியைப் போல் மானிடரின் மனவிருளை நீக்கும் இஞ் ஞானபானு "கலாநிலயத்தின்" பக்கங்களில் எழுதத் துணிந்தேன்.

மேற்சொன்ன மதுராபுரியைப் பண்டைக் காலத்தில் பாண்டிய ராஜாக்கள் ஆண்டுவந்தனர். அன்னார் காலத்தில் கட்டப்பட்ட ஆகாயமளாவுங் கோபுரங்களும், விசித்திர வேலைப்பாடுகளமைந்த கோயில்களும், பாவங்களோட்டும் பாவனம் நிறைந்த தடாகங்களும் அங்கே இன்றைக்கும் பிரத்தியக்ஷப் பிரமாணமாய்க் காணப்படுகின்றன. இங்கு ஒருகாலத்தில் மலையத்துவஜபாண்டியன் என்னும் ஒரு பாண்டிய பூபதி செங்கோலோச்சிவந்தான். அன்னவன் ஸகலகலாவல்லவனாய், நாற்சேனை நாயகனாய், தர்மதேவ ஸ்வரூபியாய் விளங்கினான். வீணிற்பல பகர்வானேன். அவனுடைய மாளிகையே கலாநிலயமாய், எளியோரின் புகலிடமாய், சத்துருக்களின் சரக்கூடாய், மித்திரர்களின் மனக்கோட்டையாய் விளங்கிற்றென்று சொல்லுவோம்.

ஸகல ஸம்பத்துக்களையும் இம்மியளவும் குறைவின்றி அடைந்திருந்தானேனும் செல்வத்துட் செல்வம் பெருஞ்செல்வமாகிய மக்கட்செல்வம் ஒன்றை மாத்திரம் அடைந்தா னில்லை. அரசனும் அரசியும் அறங்கள் முப்பத்திரண்டையும் அமோகமா யியற்றினர். உபசாரங்கள் பதினாறையும் உத்தமமாய்ப் புரிந்தனர். ஆயினும், பக்தர்மனதை மேலும் மேலும் பரிசோதிக்கும் பரம்பொருள் மனம் கரைந்தபாடில்லை. பாண்டியராஜ தம்பதிகள் அகங்கரைந்து அருட்பிரகாசனை அனவரதமும் துதித்தனர். கடைசியாக, குரு உபதேசத்தின்படி புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தனர். முக்கண்ணன் தனது அருட்கண்ணைத் திறந்தருளினான்.

யாககுண்டத்தில் ஒரு பெண்மகவு உதித்தது. பாண்டியனும் பத்தினியும் அக்குழவியை வாரியெடுத்து, மார்போடணைத்து, உச்சிமோந்து, உவகை பூத்தனர். மதுரை மக்களும் குதூஹல மடைந்தனர். குழந்தையின் நேத்திரங்கள் மீனுருவத்தைப் போலிருந்தமையால் "மீனலோசனி" என்று அவளை அழைக்கலாயினர். நாளடைவில் சுருக்கமாய் "மீனாக்ஷி" என்று கூப்பிட்டார்கள். மீனாட்சி நாளுங்குநாள் வளர்மதி போல் வளர்ந்து ஆடல் பாடல்களில் குழவிப்பருவத்தைக் கழித்தாள். நல்ல கல்விகேள்விகளிலும், ராஜவம்சத்துக்குரிய யானை யேற்றம், குதிரைச் சவாரி, ரத சாரத்தியம், அஸ்திரசஸ்திரப் பயிற்சிகளிலும் தனது பாலப் பருவத்தைப் போக்கினாள். கண்டோரும் கேட்டோரும் களிகூர்ந்து, "பொறுத்தாலும் பெற்றான் பொற்குவியலை," "பட்டாலும் பெற்றாள் பதுமநிதியை" என்று ராஜ ராஜாத்தியரின் பெரும் பாக்கியத்தைக் குறித்து வாயார வாழ்த்தி மனதாரப் புகழ்ந்தனர்.

மகளின் மாண்பைக் கண்டு களித்த மலையத்துவஜன் அவளுக்கு ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்து அவ் வானந்த அமிர்தத்தையும் அள்ளிக்குடிக்க அவாவுற்றான். நற்குடி மக்களின் மனப்பான்மையையும் நாடினான். மந்திரிப் பிரதானியரின் மந்திராலோசனையைக் கேட்டான். உயிர் ஒன்று உடல் வேறு என்னும்படி ஒத்து வாழும் உத்தம அரசனும், அமைச்சும், பிரஜைகளும் வெகு கோலாகலத்துடன் தத்தம் பூர்ண சம்மதத்தைத் தெரிவித்தனர். மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், அழகிய வீதிகளும், அத்தாணி மண்டபங்களும், கோட்டை மதில்களும், கோபுரக்கலசங்களும் விதம்விதமாய் அலங்கரிக்கப்பட்டன. பார்த்த இடமெல்லாம் பந்தற்படிகளும், கேட்ட இடமெல்லாம் மங்களகீதமும், நிமிர்ந்த இடமெல்லாம் பலப்பல தோரணங்களும், குனிந்த இடமெல்லாம் விசித்திரக் கோலங்களும், உட்கார்ந்த இடமெல்லாம் உருக்கிய நெய்த் தீபங்களும், ஓடிய இடமெல்லாம் உயர்ந்தாடும் கொடிகளும், நடந்த இடமெல்லாம் நானாவிதவாத்திய கோஷங்களும் நிறைந்து விளங்கியது பூலோக அமராபதியாகிய ஆலவாய்மதுராபுரி. நன்முகூர்த்தத்தில் நாற்றிசைகளினின்றும் கொண்டுவரப்பட்ட நன்னீரால் அபிஷேகஞ் செய்யப்பட்டாள் மீனாம்பிகை. அழகே உருவாய் அவதரித்துள்ள அவளுக்கு ஆடையாபரணங்களை அணிந்து அழகுசெய்தனர். குலாசாரப்படி தேவதாராதானம் முடித்து அண்டங்களும் அதிரும்படியான வாத்திய கோஷங்களினிடையே, பிரமனும் பிரமிக்கும்படியான வேத கோஷங்களினிடையே, கலைவாணியும் கவனிக்கும்படியான சங்கீதங்களினிடையே மீனலோசனிக்கு முடிசூட்டினார்கள். பிறகு ஐராவதத்தை நிகர்த்த வெள்ளையானையின் மீது அமர்ந்து வெகு ஆடம்பரத்துடன் மீனாம்பிகை ஊர்கோலம் வந்தாள். பொற்றாமரைக் கயத்தில் தோன்றிய செந்தாமரை யல்லவா? முன்னோர்களின் பிரபாவங்களுக்கு எள்ளளவும பங்கம்வராமல் நீதி பிறழாது ராஜ்ய பாரம் தாங்கிவந்தாள்.

இது நிற்க, தவமாய்த் தவங்கிடந்து தரையின்மீது அன்னமுண்டு அம்பிகாபதியின் அருளாலுதித்த அருமந்த புதல்வி மீனும்பிகையைப் பெற்றெடுத்த மலையத்தவஜன் மகளின் மகத்துவங்களைக் கண்டு மனம் பூரித்து ஆநந்தவாரிதியில் அமிழ்ந்தான். அமிழ்ந்தவன் எழுந்திருக்கவில்லை. விதி யாரை விட்டது; அவரவர் கர்மத்தை அவரவர் அநுபவித்தே தீரவேண்டு மல்லவா? இன்னுங் கொஞ்சகாலம் மகளின் மாட்சிமை தங்கிய ஆட்சியைக் கண்டு களிக்கப் பெறாத தௌர்பாக்கியசாலியாய்ப் பரமனடி சார்ந்தனன்.

ஐயோ பாவம்! பிதாவின் பிரிவால் உண்டான துக்கத்தை வெளிக்காட்டாத மீனாக்ஷி தினந்தோறும் ராஜ்ய விஷயங்களைச் செவ்வனே கவனித்துவந்தாள். இந்தக் காலத்துப் பலபேரைப்போல் "பல ஜோலிகளில் ஓய்வில்லை" என்னாது அனுதினமும் அந்திவேளையில் ஆலயஞ்சென்று ஆண்டவனை அர்ச்சிப்பாள். பிரஜைகளின்மனம் கோணுமலிருப்பதற்குரிய சிறிதும் பெரிதுமாகிய ஒவ்வொரு ராஜாங்கக் கடமையையும் நன்றாய்க் கவனித்து ஒன்றன் பின்னொன்றாய் ஒழுங்காய் நிறைவேற்றினாள். மன்னுயிரைத் தன்னுயிராய்ப் பாவித்து மக்களைப் பரிபாலித்து வரும் ஆற்றலைக் கண்டு பிறநாட்டு மன்னரும் அதிசயித்தனரென்றால் மீனாக்ஷியின் அரசியலைக் குறித்து நாம் இன்னும் விவரியாமல் இதோடு விடுவோம்.

புதல்வியின் புகழில், நாயகன் மரித்த துயரத்தையும் மறந்த காஞ்சன மாலை மணப்பருவத்தைக் கிட்டிய மகளுக்குத் தக்க வரன் கிடைக்கவேணுமே யென்று அல்லும் பகலும் அனவரதமும் பகவானைப் பிரார்த்தித்தாள். அதைக் கண்ட ராணி மீனாட்சி, "அம்மா! விவாக விஷயம் பிறகு பார்த்துக்கொள்ளுவோம். இப்பொழுது நான் எல்லாத் தேசங்களுக்குஞ் சென்று திக்குவிஜயஞ்செய்ய உத்தேசிக்கிறேன். அநுமதிதந்து ஆசீர்வதியுங்கள்" என்று அடிபணிந்து கோரினாள். காஞ்சனமாலையும் தடையின்றி அனுமதிதந்து கட்டியணைத்து முத்தமிட்டு, "அளவற்ற ஜெயத்துடன் க்ஷேமமாய்ச் சீக்கிரமே மீண்டும்வருவாயாக" வென்று வாழ்த்தியனுப்பினாள். (தொடரும்)

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[752-வது பக்கத் தொடர்ச்சி]

5. புத்தி.

புத்தி யென்பது ஞானம் அல்லது பொருள் விளக்கம் எனப்படுவதாம். அது அநுபவவகையென்றும், ஸ்மரணவகையென்றும் இருகூறாகும். அவற்றைக் கீழே விவரிப்போம். புத்தி ஞானம் முதலிய சொற்களை ஒருபொருள் குறிக்கும் பரியாய மொழிகளாய் நாம் உபயோகப்படுத்தினாலும், சில தர்க்கவாதிகள் ஞானம் ஐந்துவகை யென்றும், அவற்றுள் புத்தியென்பது நிகழும் விஷயத்தின் ஞானமென்றும், வரும் விஷயத்தின் ஞானம் மதி யென்றும், கழிந்த விஷயத்தின் ஞானம் ஸ்மிருதி யென்றும்; முக்கால விஷயஞானம் பிரக்ஞை யென்றும் (i. e. Consciousness), பிரக்ஞையில் நவ நவமாய் நிகழும் ஞானம் பிரதிமை யென்றும் (apperception and wisdom) பகர்வார். இவைகளைத் தேவாரத்திற் காணலாம்.

புத்திக்கு உதாரணம்:—

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயின் நூலால்
பொதுப்பந்தர் அதுவிழைத்துச் சருகால் மேய்ந்த
சித்தியினா லரசாண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப்பெய்தார் திறலால் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளா வன்பு
விரவியவா கண்டதற்கு வீடு காட்டிப்
பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியேன் உய்ந்த வாறே.
திருப்பாசூர் - திருத்தாண்டகம் 6.

மதிக்கு உதாரணம்:—

நெதியவன்காண் யாவர்க்கும் நினைய வொண்ணா
நிதியவன்காண் வேதியன்காண் நினைவார்க்கென்றும்
கதியவன்காண் காரவன்காண் கனலா னன்காண்
காலங்க ளூழியாய்க் கலந்து நின்ற
பதியவன்காண் பழமவன்காண் இரதந் தான்காண்
பாம்போடு திங்கள் பயில வைத்த
மதியவன்காண் வானவர்கள் வணங்கி யேத்தும்
வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே
திருவலிவலம் - திருத்தாண்டகம் 9.

ஸ்மிருதிக்கு உதாரணம்:—

துஞ்சும் போதுஞ் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கு நீதியை
நஞ்சு கண்டத் தடக்கிய நம்பனை
வஞ்ச னேனினி நான்மறக் கிற்பனே
மறக்கிற்பனே யென்னும் திருக்குறுந்தொகை ૪.

பிரக்ஞைக்கு உதாரணம்:—

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரும் மேவி
இருப்பவனை யிடைமருதோ டீங்கோய் நீங்கா
இறையவனை யெனையாளுங் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.
திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருத்தாண்டகம் 7.

பிரதிமைக்கு உதாரணம்:—

வாயானை மனத்தானை மனத்து னின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் றன்னைச் [றென்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றே னானே.
திருவாலவாய்த் திருத்தாண்டகம் 8.

மேற்கூறிய புத்திவகை யாவும், பிரவிர்த்தி நிவிர்த்தி ஆகாரம் விகாரம் முதலிய சர்வ வியவகாரத்திற்கும் ஏதுவாய ஞானமாதலால், அவற்றிற்கு அடிப்படையாயுள்ள அநுபவம் ஸ்மிருதி யென்பனவற்றினின்று இவை யெழுந்து விளங்குமென்றுகூறுவார்கள். அவற்றுள் அநுபவத்தின் தன்மையை ஆராய்வோம். அநுபவம் (Experience) என்பது யதார்த்த அநுபவமென்றும் அயதார்த்த அநுபவமென்றும் இருவகை. யதார்த்த அநுபவம் பிரத்தியக்ஷத்தில் நேர்ந்த உண்மையின் விஷயமாகும் (உ - ம்)

"மையரி மதர்த்த வொண்கண் மாதரார் வலையிற்பட்டுக்
கையெரி சூல மேந்துங் கடவுளை நினைய மாட்டேன்
ஐநெரிந் தகமி டற்றே யடைக்கும்போ தாவி யார்தாம்
செய்வதொன் றறிய மாட்டேன் திருப்புக லூரனீரே"

திருப்புகலூர் - திருநேரிசை 2.

அயதார்த்த அநுபவத்திற்கு உதாரணம் பொய்யினை மெய்யென்றெண்ணி நெறியிலா நெறியிற் செல்லலாகும். [னும்

இருள்தரு துன்பப் படலமறைப்பமெய்ஞ் ஞானமென்
பொருள்தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப்புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருள்தரு கைகொடுத்தேற்றுமையாற னடித்தலமே

திருவையாறு - திருவிருத்தம் 4.

யதார்த்த அநுபவமாவது அர்த்த அவிசம்வாதியாகும். அது காட்சி முதலிய பிரமாணங்களாற் றோன்றுவது. பித்தம் படலம் முதலிய குற்றமில்லாத கட்புல முதலியவற்றாலுண்டாம் குடமுதலிய ஞானமும், புகையை இலிங்கமாகவுடைய தீ ஞானமும், ஆவின் ஒப்புமைகாண்டலால் ஆமாவென்னும் சொற்பொருள் (சத்திவாச்சிய)ஞானமும் இதன்பாற் படும்.

அயதார்த்தமாவது அருத்தத்தை நீங்கியது. இது பிரமாணப் போலியாற் றோன்றுவது. இது சம்சயம், தருக்கம், விபர்யயம் என மூவகை. சம்சயம் என்பது சந்தேகம், தர்க்கம் என்பது அதன்மே லுண்டாகும் புத்தியின் ஆராய்ச்சி, விபர்யயம் என்பது விபரீத நிச்சயம். அதாவது கள்வன் என்று கட்டையை இருளில் நினைத்தலும், நிலவில் சுத்திகையை வெள்ளி யென்று எண்ணுவதுமாம்.

ii ஸ்மரணம் (Memory)

இது யதார்த்தம் அயதார்த்தமென விருவகை. அவ்விருவகையும் நனவில் காணலாம். கனவில் எல்லா ஞானமும் அயதார்த்த ஸ்மரணமாகும்.

(நனவு)

தனக்கே றுமை தவிர்க்கென் றுவேண்டினும்
நினைத்தேன் பொய்க்கருள் செய்திடு நின்மலன்
எனக்கே வந்தெதிர் வாய்மூருக் கேயெனப்
புனற்கே பொற்கோயில்புக்கதும் பொய்கொலோ

திருவாய்மூர் - திருக்குறுந்தொகை. 3.

(கனவு)

துஞ்சும் போதுந் துயிலின்றி யேத்துவார்
வஞ்சின் றிவலங் கொண்மறைக் காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவை பலிகொணர்ந்
தஞ்சி நிற்பது மைந்தலை நாகமே.

திருமறைக்காடு - திருக்குறுந்தொகை. 6.

நனவில் வேறுபாடின்றி (பைத்தியம் முதலிய தோஷங்களா லாக்கப்படாமல்) தொடர்ச்சியாய் நிகழும் ஞானத்தை நிராகார ஞானமென்பர். ஆதலால் ஞானகாரத்தில் அருத்தானுமானமும் ஒழிபெனத் தருக்கவாதிகள் கொள்வர். எல்லா ஞானமும் அருத்தத்தால் கூறப்படுவன. ஞானம் பொருளொடு கூடியே மனத்தால் அறியப்படுதலின் நான் குடத்தை அறிகின்றேன் என்னும் ஞானம் தோன்றும். ஞானமே வடிவாய் நிற்கின்றவனுக்கு நான் என்னும் உணர்ச்சி நிகழாது. அப்பர், தனது பூர்வ வுணர்ச்சியை பின்னுணர்ச்சியுடன் சீர்தூக்கல் காண்க:—

நானுகந் துன்னைநாளும் நணுகுமா கருதி யேயும்
ஊனுகந் தோம்பு நாயேன் உளளுற ஐவர் நின்றார்
தானுகந் தேயுகந்த தகவிலாத் தொண்ட னேனேன்
ஆனுகந் தேறு வானே யாவடு துறையு ளானே

திருவாடுதுறை - திருநேரிசை. 1.

6. மனம்.

பிரமேயம் பன்னிருவகை யெனவும், அவற்றுள் முதலைந்தாகிய, ஆன்மா சரீரம் இந்திரியம் அருத்தம் புத்தி யென்பவற்றின் இலக்கணமும் சிறிது அப்பர் தேவார வாயிலாய்க் கண்டோம். இனி 6-வது பிரமேயமாகிய மனதைப்பற்றிச் சில மொழிகள் பகருவாம்.

மனமென்பது அளக்கலாகா அளவும் தோற்றமுமுடையது. ஆன்மகோடிகளிற் சிறந்தோர் மனதைப் பரிசோதிக்கப் பரமன் வேடங்கள் பல கொண்டு திருவிளையாடல்கள் பற்பல நிகழ்த்தி, அம் மேலோர் மனதின் தன்மை, பரமனாலும் நிர்ணயிப்பதற்கு அரிதென்றும், பரிசோதனையாலே வெளியாக வேண்டியதென்றும் நிரூபிக்கலாகும். ஆயினும் மனம் அகவிந்திரியத்தில் ஒன்று; பஞ்சபூதங்கள் உபாதானமுடையதாயினும், அது அவற்றிற்கும் அதீதமாய்ச் செல்லக்கூடியதாகும். இதன் போக்கு ஒருவராலும் உணரலாகாது.

மனமெனுந் தோணி பற்றி
மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச்
செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி
மறியும்போ தறிய வொண்ணு
துனையுறு முணர்வை நல்கா
யொற்றியூ ருடைய கோவே.

திருவொற்றியூர் - திருநேரிசை. 2.

இம்மனதின் தன்மையை முன்னரே சிறிது விளக்கினோம். மனோசாஸ்திரம் (Psychology) என்னும் நூல் மனத்தின் தன்மையை மேல்நாட்டுத் தத்துவ ஆராய்ச்சி முறையில் விளக்கும். இதைக் காரியவடிவென்பது பொருந்தாது. இது காரணமாய்ப் பற்பல காரியங்களைச் செய்விப்பது காண்க:—

மருளவா மனத்த னாகி
மயங்கினேன் மதியி லாதேன்
இருளவா வறுக்கு மெந்தை
யிணையடி நீழ லென்னும்
அருளவா பெறுத லன்றி
யஞ்சினா னலமந் தேற்குப்
பொருளவா தந்த வாறே
போதுபோய்ப் புலர்ந்த தன்றே.

தனித் திருநேரிசை. 1

மனம் அகவிந்திரியத்தில் ஒன்றாய்க் கொள்ளப்படினும், தேகத்துள்ளிருக்கும் ஒரு பொருளெனக் கொள்ளார் மனோசாஸ்திரிகள்:—

சினத்தி னல்வருஞ் செய்தொழி லாமவை
அனைத்தும் நீங்கிநின் றுதர வாய்மிக
மனத்தி னுள்மரு கற்பெரு மான்றிறம்
நினைப்பி னார்க்கில்லை நீள்நில வாழ்க்கையே.

திருமருகல் - திருக்குறுந்தொகை 3.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[749-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 5, களம் 1.

இடம்:—பிலிப்பையில் வெளியிடம். ஆக்டேவியஸ்ஸும் ஆண்டனியும் தம் சைன்னியங்களுடன் வருகின்றனர்.

ஆக்டேவியஸ்:—பார், ஆண்டனி, நமதெண்ணங்கள் விடைபெறுகின்றன (1). பகைவர், மலைகளையும் மேட்டிடங்களையும் பற்றிநிற்பாரே யன்றி இறங்கி வர மாட்டாரென்று நீ இயம்பினுய். அவ்வாறு நேரவில்லை. சமர்தான் கையருகு சார்ந்திருக்கின்றது. நாம் கேளாமுன்னம் விடைகொடுத் திப் பிலிப்பையில் இங்கு நம்மை அச்சுறுத்துங் கருத்தினர் அவர் (2).

ஆண்டனி:—சேசெ! அவர்தம் உள்ளத்தில் யான் உளன் (3). ஆதலின், ஏன் இப்படிச் செய்கின்றனர் களென்பது அறிவேன். வேற்றிடங்கள் சென்று அவர் காண்பதற்கு அமைந்திருக்கலாம். எனினும், இப்முகத்தினுல், தமக்கு வீரமுண்டென்பதை நம் கருத்தினில் நிறவஎண்ணிக் கொடிய தீரமுடன் இங்கு வருகின்றனர் (4). ஆயினும் அதுவன்று. (5).

[ஓர் தூதன் வருகின்றான்]

தூதன்:—தலைவர்காள், ஆயத்தமாகுங்கள்; பகைவர் மிக்க கம்பீரமாய்ப் பகட்டிவருகின்றனர்; போரின் குருதிக்குறி பறக்கின்றது (6). செய்வன உடனே செய்யப்படவேண்டும்.

ஆண்டனி:—ஆக்டேவியஸ்; களத்தின் இடப்புறம் உன் போரினை மெல்ல நடத்திச்செல்.

ஆகடேவியஸ்:—வலப்புறம் நான். இடப்புறத்தை நீயே கொள். (7)

ஆண்டனி:—இவ்வவசரத்தில் நீயேன் என்னைக் குறுக்கிடுகின்றாய்?

ஆக்டேவியஸ்:—உன்னை நான் குறுக்கிடவில்லை. மற்று, நான் அப்படியே செய்வேன். (8)

[புறப்படுகின்றனர்]

ப்ரூட்டஸ்ஸும் காஸ்ஸியஸும் தம் சைனியங்களுடன் வருகின்றனர். லூஸிலியஸும், டிடினியஸும், மெஸ்ஸாலாவும், மற்றவர்களும் வருகின்றனர்]

ப்ரூட்டஸ்:—அவர்கள் நிற்கின்றனர். நம்முடன் ஏதோ பேச விரும்புகின்றனர் போலும்.

காஸ்ஸியஸ்:—உறுதியுடனிங்கு நில், டிடினியஸ்: நாங்கள் சென்று பேசவேண்டும் (9).

ஆக்டேவியஸ்:—மார்க் ஆண்டனி, போர் துவக்குங் குறியினை நாம் கொடுத்துவிடலாமோ (10)?

ஆண்டனி:—வேண்டா, ஸீஸர், அவர் எதிர்த்தபின் நாம் எதிர்விளம்புவோம் (11). முன் செல். தலைவர்கள் ஏதோ மொழிய விரும்புகின்றனர் (12).

ஆக்டேவியஸ்:—கட்டளை கொடுக்கும்வரையில்இடம் விட் டசையவேண்டா (13).

ப்ரூட்டஸ்:—அடிகளின் முன் மொழிகள்: அப்படியோ சுதேசிகாள்? (14).

ஆக்டேவியஸ்:—மொழிகளை நாங்கள், உங்களைப்போல், அதிகம் விழைகின்றோம் என்பதாலன்று (15).

(1) பகைவர், இங்கு வந்து நம்மை எதிர்ப்பாரோ, அல்லது நாம் சென்று அவர்களை எதிர்க்கும் வரையில் காத்திருப்பாரோ, என்றெல்லாம் நாம் எண்ணி எண்ணிக் கொண்டிருந்த சந்தேகம் தீரும்படி நம் நம்பிக்கைக் கிணங்க அவர்களே இங்கு வருகின்றனர் பார்—என்பது பொருள்.

(2) பகைவர்தம் போர்த் தந்திரங்கள் என்னவாயிருக்கும் என்று ஆக்டேவியஸ்ஸும் ஆண்டனியும் தம்முள் கலந்து பேசிக்கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது, தாம் இருக்கும் மேட்டிடங்களைவிட்டிறங்கிப் பிலிப்பை சமவெளிக்கு அவர் வரமாட்டார் என்று ஆணடனி கருதினுன். ஆயினும், அதற்கு மாருகப் பகைவர் வந்துவிட்டபடியால், ஆக்டேவியஸ் அதனைச் சொல்லி இடித்துரைக்கின்றான்.

(3) அவர்களுடைய அந்தரங்க எண்ணம் எனக்குத்தெரியவந்திருக்கின்றது—என்பது பொருள்.

(4) நாங்கள் உங்களுக்குப் பயப்படவில்லை என்று காட்டி நம்மை நடுங்கசசெய்வதற்கே இங்கு அவர்கள் வருகின்றனர் களேயன்றி வேறன்று—என்பது பொருள்.

(5) ஆயினும், இதற்குரிய வீரமோ அவர்களுக்கு வாஸ்தவத்தில் இல்லை—என்பது பொருள்.

(6) போர்புரிய வருகின்றோம் என்பதற்கு அடையாளமான கொடியைப் பறக்கவிட்டிருக்கின்றனர்—என்பது பொருள்.

(7) எவ்விடத்தும் ஒரே செய்திதான். அங்குக் காஸ்ஸியஸும் ப்ரூட்டஸும் ஒவ்வாததுபோலவே, இங்கு ஆண்டனியும் ஆக்டேவியஸ்ஸும், ஒருவரை யொருவர் மறுப்பதே முறையாகக் கொண்டிருக்கின்றனர்.

ஆண்டனி சொன்னபடி தான் ஏன் நடக்கவேண்டும் என்னும் இறுமாப்போ, அல்லது, களத்தின் இடப்புறத்தைத் தனக்கு அளித்ததில் ஏதோ சூதிருக்கவேண்டு மென்றுகருதியோ ஆக்டேவியஸ் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்க வேண்டும்.

(8) தன் இஷ்டப்படியே செய்வான் என்பதை வற்புறுத்திக் கூறுகின்றான்.

(9) போர்துவக்கு முன் தம்முடன் ஏதோ பகைவர்பேச விரும்புகின்றனர் எனக்கருதிய ப்ரூட்டஸ் அதனைக் காஸ்ஸியஸிற்குத் தெரிவிக்க, காஸ்ஸியஸ், அவ்விடத்திலேயே சேனையுடன் உறுதியாய் நிற்கும்படி டிடினியஸ்ஸிற்குக் கட்டளையிட்டு ப்ரூடஸுடன் ஆக்டேவியஸும் ஆண்டனியும் இருக்குமிடம் நோக்கி நடக்கின்றான்.

(10) (11). தாமே, போரைத் துவக்கிவிடலாமோ என்று ஆக்டேவியஸ் கேட்க, ஆண்டனி அதனை மறுத்து, "நாம் துவக்கவேண்டா, அவர்களே துவக்கி நம்மை எதிர்க்கட்டும், பிறகு நாம் போர் நடத்தலாம் என்கின்றான்.

(12) இதற்குள், ப்ரூட்டஸும் காஸ்ஸியஸும் தம்மை நோக்கி வருவதுகண்டு, ஆக்டேவியஸும் ஆண்டனியும் அவர்களைச் சந்திக்கின்றனர்.

(13) இது தன்னுடைய சைனியத்திற்கு இட்ட உத்தரவு.

(14) போரிற்புகுந்து நாம் மோதுவதன் முன், ஏதேனும் மொழியவேண்டுமென்பது உங்கள் விருப்பமோ - என்பது பொருள்.

(15) நாங்கள் உன்னுடன் பேச வந்திருக்கும் இது, போர்செய்வதைக் காட்டிலும் பேச்சு வளர்ப்பதில் அதிகம் ஆசையுடையவர்களாய் இருக்கின்றோம் என்ற காரணத்தாலன்று; நீங்கள் ஏதோ பேசவிரும்பியவர்போல் தோன்றியபடியால் வந்தோம்—என்பது பொருள்.

(16) கெட்ட அடிகள், என்பது, திறமை இன்றிச் செய்யும் போரைக் குறிக்கின்றது. "தக்கபடி அடிகள் ஏவிச்

ப்ரூட்டஸ்:—கெட்ட அடிகளைக் காட்டிலும் நல்ல மொழிகளே சிறந்தன, ஆக்டேவியஸ் (16).

ஆண்டனி:—உன் கெட்ட அடிகளுக்கிடையே, ப்ரூட்டஸ், நல்ல மொழிகளை வழங்குகின்றாய் நீ. "நீடு வாழ்க! இனிது வாழ்க, ஸீஸர்" என்று நீ ஸீஸரின் இதயத்தில் இழைத்த புழையினைக்காண்(17).

காஸ்ஸியஸ்:—ஆண்டனி, உன் அடிகளின் அபிநயத்தினை இன்னும் அறிந்தபாடில்லை. (18). மற்று உன் மொழிகளோ, வண்டுகளைக் களவுகொண்டு தேனின்றி விட்டுவிடுகின்றன (19).

ஆண்டனி:—கொடுக்கையுங் கொள்ளாமல்விடவில்லை. (20).

ப்ரூட்டஸ்:-ஓ! ஆம்! ஒலியுமின்றி விட்டனை; ஏனெனில் ஆண்டனி, அவைகளின் முரலலையுங் கவர்ந்துகொண்டு, நின் நல்லறிவினால், கொட்டுவதன் முன் வெருட்டுகின்றாய். (21).

ஆண்டனி:—கயவர்காள், ஸீஸரின் பக்கத்தில் உங்கள் கொடிய வாள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிப் பிளந்தபோது நீங்கள் அப்படிச் செய்யவில்லையே (22). குரங்குகளென்னப் பற்களைத் தெரியக் காட்டினீர். நாய்களெனக் கெஞ்சினீர். அடிமைகளென்ன ஸீஸரின் கால்களுக்கு முத்தமிட்டு வணங்கினீர்; அப்பொழுது, கொடும்பாவி காஸ்கா, நாய் போல் பின்னிருந்து ஸீஸரைக் கழுத்தி லடித்தனன்—ஏ, இச்சகக்காரர்களே! (23).

காஸ்ஸியஸ்:—இச்சகக்காரர்களா! (24). இதோ, ப்ரூட்டஸ், உனக்கே நீ நன்றி செலுத்திக்கொள் (25). காஸ்ஸியஸ் ஆண்டிருப்பானாயின் இந்த நாக்கு இன்று இப்படிப் பழித்திருக்காது (26).

ஆக்டேவியஸ்:—வாருங்கள், வாருங்கள் காரியத்தைப் பார்ப்போம். வாதாடுவதே நம்மை வியர்க்கச் செய்கின்றதென்னின், அதன் சோதனை செந்நிறத் துளிகளாய்த் திரியும் (27). பார்; சதியாளர்களுக்கு விரோதமாய் என் வாளினை உருவுகின்றேன். எப்பொழுது இச்சுரிகை மீண்டும் தன் உறையிற் சேருமென்றெண்ணுகின்றீர்?—ஸீஸரின் முப்பத்து மூன்று இரணங்களின் பழியினை முழுவதும் தீர்க்கும் வரையில், அல்லது இன்னொரு ஸீஸர் சதியாளர் சாயகத்திற்குப் படுகொலை யொன்று சேர்க்கும் வரையில்—ஒருபோதும் இல்லை (28).

சமர்செய்யும் திறமை உனக்கு இல்லை என்பதை நீயே அறிவாயாதலின், மொழிகளேனும் சில பேசலாம், என்று பார்க்கின்றாய் போலும்"—என இகழ்ந்துரைக்கின்றான்.

(17) கெட்ட அடிகள்—பாதகச் செய்கை. "நல்லமொழிகளைப் பேசிக்கொண்டே பாதகங்கள் செய்கின்றவன் நீ" "வாழ்க வாழ்க ஸீஸர்" என்று நன்மொழிகளை விளம்பிக்கொண்டே ஸீஸரைக் கொன்ற வஞ்சகனன்றோ நீ," என்று ஏசுகின்றான். புழை - துவாரம்.

(18) உன் அடிகள் எவ்வாறிருக்கும் என்பது இன்னும் ஒருவருக்குந் தெரியாது, என்பது, நீ போர் புரியக் கண்டவர் ஒருவரும் இல்லை, என்னும் குறிப்புடையது.

(19) தேனீக்கள் சேர்த்துவைத்த தேனெல்லாம் உன் வாயிலேயே இருப்பது போல் இனிக்கப் பேசுவதற்குப் பயின்ற கள்வன், நீ—என்பது பொருள்.

(20) தேனை மாத்திரமன்றிக் கொடுக்கையும் நான் வண்டினிடமிருந்து கவர்ந்துகொண்டிருக்கிறேன், என்னுமிது, வாய்நயமாத்திரமல்லாமல், பகைவரை வருத்தவல்ல கைத்திறமும் உடையேன்—என்னும் குறிப்புடையது.

(21) தேனீக்கள் மாதிரி வீணிற்கு ஒலிசெய்து திரியவும் கற்றிருக்கின்றாய்—குலைக்கின்ற நாய் கடிக்காது என்பதுபோல், கத்தும் வண்டு கொட்டாது, என்று பரிகசிக்கின்றான்.

(22) அப்படிச் செய்யவில்லையே—கொட்டுவதன்முன் குரலைக் காட்டவில்லையே. முன்னொன்றும் தெரிவிக்காமல், கதுமெனக் கொலைசெய்துவிட்ட வஞ்சகர்கள் நீங்கள்—என்பது பொருள்.

(23) சதியாளர்கள் ஸீஸருக்குச் செய்த நயவஞ்சகத்தை எடுத்துக் காட்டிப் பழிக்கின்றான்.

(24) இச்சகக்காரர்கள் என்றா எங்களை ஏசுகின்றீர்கள் என்று சினமுடன் வியந்தது.

(25) இந்த வசையை இன்று கேட்பதற்கு இடம் தந்து கொண்டவன் நீயேயாதலால் உனக்கு நீயே கடமைப்பட்டவனாய் இருக்கின்றாய்.

(26) ஆண்டிருத்தலாவது—அவனுடைய சொற்படி நடந்திருத்தல். "ஆண்டனியையும் கொன்றுவிட வேண்டும் என்று நான் சொன்னதை முன் நீ கேட்டிருப்பாயாயின், இன்று இவன் நம்மைப் பழித்திருக்கமாட்டா னன்றோ—என்பது பொருள்.

(27) நீங்கள் துரோகிகளோ அல்லரோ வென்று வியர்க்க வியர்க்க வாதாடுவானேன். அதன் உண்மையை இப்பொழுது யுத்தத்தில் சோதித்துவிடுவோம். அப்பொழுது வியர்வைக்குப் பதிலாய் இரத்தம் சொரிபவர் யாரென்று தானே தெரிந்துவிடுகின்றது—என்பது பொருள்.

(28) சுரிகை, சாயகம்-வாள். இன்னொரு ஸீஸர்-ஆக்டேவியஸ் ஸீஸர். ஜூலியஸ் ஸீஸரைக்கொன்ற பழியையேனும் தீர்க்கவேண்டும், அல்லது அச்சதியாளர் படுகொலை வாளினால் நானுமே வீழவேண்டும்; அதுவரையில் உயர்த்திய இக்கத்தியைத் தாழ்த்தமாட்டேன்—என்றுவீரவாதஞ்செய்கின்றான்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள்:

ச்யாவனப்ராச

ஜீவஸுதா

பாதாமி லேகியம்

தங்வந்தரி லேகியம்



தைலங்கள்:

அமிர்தாமலக

பிருங்காமலக

ஸுகுமார

ஹிமஸாகர

"பாலஸுதா" குழந்தைகளுக்குச் சிறந்த டானிக் (ரூபா 1-0-0)

காஸ்ட்ராலக்ஸ்: சுத்தம் செய்து மூலிகை சேர்ந்த ஆமணக்கெண்ணெய் (6 அவுன்ஸ் 8 அணு)

ஸ்ப்ளீவரால்: குழந்தை கட்டிக்கும், ஜ்வரக் கட்டிக்கும் (ரூபா 2-0-0)

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை, (அணு 4) கோரோஜனை மாத்திரை, (அணு 6) பால சஞ்சீவினி (அணு 4)

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

"நஞ்சன்கூடு பல்பொடி"

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட்-டப்பி

(தபால் பில்லையுடன் லிஸ்டுக்கு எழுதவும். அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.)

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றெருகுதி
நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும் (வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,

விலை அணு **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM

PURASAWALKAM :: VEPERY, MADRAS.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேத வியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையினும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானலவரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும்,நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4. மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B .A. B. L) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

களவியற் காரிகை:—(S வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொரு ளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயம் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். ஏஜெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேணடும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

வர்த்தமானம்

ஜெர்மனியில் கலகம்:-ஜெர்மனியில் நடக்கும் எலக்‌ஷனில் தேசீய கட்சியாருக்கும், நாஜி கட்சியாருக்கும் ஏற்பட்ட சண்டையை அடக்குவதற்குப் போலீஸ் உதவி வேண்டப்பட்டது. இச்சண்டையால் 8 பேர் காயமடைந்தனர் என்று அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

***

வட்டமேஜை மஹாநாட்டுச் சேலவு:—செப்டம்பர் மாதம் 28-ம் தேதியன்று கூடிய இந்தியச்சட்ட சபைக் கூட்டத்தில் கேட்கப்பெற்ற ஒரு கேள்விக்கு விடையாக, வர்த்தக இலாகா அங்கத்தினரான ஸர். C. P. ராமஸ்வாமி ஐயர் கூறியதாவது:—முதல் வட்டமேஜை மஹா நாட்டிற்காக இந்தியஅரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவு 664289 ரூபாய். இரண்டாவது வட்டமேஜை மஹாநாட்டிற்கு எவ்வளவு செலவு ஏற்பட்டதென்று முடிவாய்ச் சொல்ல இப்பொழுது இயலாது. இது விஷயமான கணக்கு இன்னும் கிடைக்கவில்லை. ஏறக்குறைய 662600 ரூபாய் இரண்டாவது மஹாநாட்டிற்காகச் செலவாயிருக்கலாம். வட்டமேஜை மஹா நாட்டிற்குச் சென்ற அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது என்பதுபற்றிய கணக்குஇல்லை. வட்டமேஜைமஹாநாட்டிற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எவ்வளவு செலவழித்திருக்கின்றனர் என்பதும் நிச்சயமாய்த் தெரியாது.

***

ஸ்ரீமான் சத்யமூர்த்தி ஐயர்:—சட்டம்மறுத்த குற்றத்திற்காகச் சிறைசென்ற ஸ்ரீமான் S. சத்யமூர்த்தி ஐயர், செப்டம்பர் மாதம் 30-ந் தேதியன்று சென்னை அரசாங்கத்தாரால் விடுதலை செய்யப்பட்டார். அவர் சென்ற மூன்றுமாத காலமாக வயித்திய சாலையில் டாக்டர் குருசாமி முதலியாரிடம் சிகிச்சை பெற்று வருகின்றார். இவரது உடல்நிலையை உத்தேசித்து, தண்டனை காலஅளவு முடியுமுன்னரே அரசாங்கத்தார் விடுதலை செய்துள்ளார்கள். அபண்டிஸிடிஸ் நோயும், நீர்ரோகமும் இவரை வருத்திக்கொண்டிருந்தன. நீர் ரோகம் குணமாகவும், அக்டோபர் மாதம் 3-ந் தேதி திங்கட்கிழமை அபண்டிஸிடிஸுக்காக ரணசிகிச்சை பெற்றார்.

***

சுதேசமித்திரன் போன்விழா:—சுதேசமித்திரன் பத்திரிகையின் பொன்விழா இந்த அக்டோபர் மாதம் 8-ந்தேதியன்று நடைபெறும். அப்பொழுது பூனாவில் நடைபெறும் கேஸரி பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான் N. C. கெல்கார் தலைமை வகிப்பார். சோஷல் ரிபார்மர் பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் K. நடராஜன், காலஞ்சென்ற ஸ்ரீமான் G. சுப்ரமணிய ஐயரது படத்தையும், அட்வகேட் ஜெனரல் ஸ்ரீமான் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஸ்ரீமான் A. அரங்கஸ்வாமி ஐயங்கார் அவர்களின் படத்தையும் முறையே திறந்து வைப்பார்கள்.

சேன்னையில் பகிஷ்காரம்:—சென்னையில் சென்ற ஒரு வாரமாகப் பரதேசி ஜவுளி மறியல் நடைபெற்று வந்தது. சென்றவார இறுதியில் மறியல் செய்த 4 தொண்டர் போலீஸாரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் விடப்பட்டனர் என்று தெரிகின்றது.

***

சைபீரியாவில் நட்ச் என்னும் ஊரில் 117-வயதுள்ள ஒரு கனவானுடைய பிறந்தநாள் கொண்டாடப் பட்டதாம். 115-வயதுடைய அவரது மனைவியும் அவரும் திடகாத்திரர்களாய் வீட்டுவேலைகளைத் தாங்களே செய்துகொண்டு இனிது வாழ்கின்றனராம். அவர்களுக்கு 100 பிள்ளைகள் பிறந்தனராம்.

***

டாக்டர் அன்னிபெஸண்டம்மையாரின் 86-வது பிறந்தநாள் சென்ற சனிக்கிழமையன்று உலகமெங்கும் கொண்டாடப்பட்டது.

***

அக்டோபர் மாதம் 2-ந் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று காந்தியடிகளின் 64 வது பிறந்த நாள் இந்தியாவெங்கும் கொண்டாடப்பட்டது.

***

சோக்கலிங்க வித்தியாசாலை:—இந்நகர் உயர் திருவாளர் ந.சொ.அரு. அருணசலம் செட்டியாரவர்கள் ஸ்தாபித்திருக்கும் சொக்கலிங்க வித்தியாசாலையில் நாளது ஆங்கிரச ஆண்டு புரட்டாசித் திங்கள் 12-ம் நாள் மாலை 3 மணிக்கு மாணவர்களால் கடவுள்வாழ்த்துப் பாடப்பெற்று "காந்தி விழா" ஆரம்பமாயிற்று. காந்திவழிபாடு முடிந்ததும் மாணவர்களான சித. சொக்கலிங்கம், அரு.நாராயணன், மு.சிவராமன் முதலியோர், "காந்தி"யைப் பற்றிய பிரசங்கங்கள் செய்தனர். தலைமை ஆசிரியர் திரு. A. இராமாநுஜாச்சாரியார் அவர்கள் ஓர் அரிய சொற்பெருக்காற்றினர்கள். காந்தி அடிகளின் திருவுருவப்படத்துடன் தேசீயக் கொடி தாங்கிப் பஜனை செய்துகொண்டு மாணவ மாணவிகள் ஊர்வலம் வந்தனர். வாழ்த்துப் பாடியதும் கற்கண்டு வழங்கப்பெற்று விழா இனிது நிறைவெய்தியது—என்று ஒரு நிருபர் அறிவிக்கின்றார்.

***

புத்தக வரவு:—"கன்றுங்கனியுதவும்" என்னும் தலைப்புடைய புத்தகம் வரப்பெற்றோம். பண்டிதர் ஸ்ரீமான் L. உலகநாத பிள்ளை இதை ஆக்கியவர். சென்னை மயிலாப்பூர் விவேக போதினி கார்யாலயத்தார் இதைப் பிரசுரித்தவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவரும், தஞ்சை வக்கீலுமான ஸ்ரீமான் த.வே. உமாமகேச்வரம் பிள்ளை ஓர் முகவுரை வரைந்திருக்கின்றார்கள். இப்புத்தகத்தின் விலை அணா 10.

***

அவசர அச்சுச்சட்டம்:—1931-வது வருட அவசர அச்சுச் சட்டம், 1932-ம் வருடம் அக்டோபர் மாதம் 8-ந் தேதியிலிருந்து இன்னும் ஒருவருட காலத்திற்கு அமுலிலிருக்குமென்று, இந்திய அரசாங்க கெஸட்டில் கவர்னர்ஜெனரல் அறிவித்திருக்கின்றார்.

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர்:— **கலாநிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**

:: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள் அமிர்தார்ணவ லேகியம் அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மாரு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

கற்பக மலர் (சிறு கதைகள்)
(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)
மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய
: : இராமாயண வினு விடை : :

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. ஏழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over	Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of	16.54 %
Claims paid up to end of 1931 over	Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)